"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்

# KALASAM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி - 2019



ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன், ஈலிங், இலண்டன்

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


பெருமையுடன் 21 வது வருடத்தில்
RUBY'S
CATERING
020 8799 7180
www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk
உன்னத உணவு
வைபவ மண்டபம்
மகோன்னத உபசரிப்பு
திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா
ACCREDITED SRILANKAN CATERERS @
Hilton
THISTLE HOTEL
Holiday Inn
உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......
Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 27

# கலசம்
# KALASAM

ஒலி 95

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம்**
**தொடர்புகள்**
மா இந்துசேகரன்

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச்
சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## பிறந்த நாளும் மறந்த கலாசாரமும்

அண்மையில் ஒரு குறுந்தகவல் என் தொலைபேசியில் வந்தது. அதில், சுமார் 5 அல்லது 6 வயதுக் குழந்தை ஒன்று பிறந்தநாள் கொண்டாடுகிறது. சுற்றியிருந்த உறவினர்கள் நல்ல தமிழில் அந்தக் குழந்தையை நீண்டநாள் வாழ்க!, நல்ல கல்வி பெறுக!, சுற்றம் சூழ வாழ்க!, நோயிலாது வாழ்க!, இன்னும் பல பிறந்த நாள்கள் காண்க! என்ற பொருள்பட வாழ்த்திப் பாடு கிறார்கள். பின்னர் அந்தக் குழந்தை ஒரு தட்டில் பல தீபங்களை வட்டமாக வைத்து ஏற்றுகிறது. ஆனால் அவற்றை வாயால் ஊதி அவிக்கவில்லை. விளக்குக்கள் தொடர்ந்து ஒளிகொடுக்கின்றன. இதைப் பார்த்தபோதுதான் இதுபற்றி எழுதவேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

பழைய காலத்தில் தமிழர் பிறந்தநாள் கொண்டாடியதில்லை. அரசர்கள்தான் தங்கள் பிறந்த நாள்களில் ஏதாவது நல்லது செய்வார்கள்; புலவர்களுக்குப் பரிசளிப்பார்கள்; நாட்டுக்கு நல்லது செய்வார்கள். ஆனால் இப்போது மேற்கு நாட்டு மோகத்தால் நாம் பிறந்த நாள் கொண்டாடுகிறோம். 'கேக்' செய்கிறோம். அதிலே மெழுகுவர்த்தியை ஏற்றிவைக்கிறோம். பின்னர் பிறமொழியில் பாட்டுப்பாடுகிறோம். பாடிமுடித்து, வாயினால் மெழுகு வர்த்தியை ஊதி அவித்து, கேக்கின் மேல் உள்ள எங்கள் பெயரையே கத்தியால் வெட்டி உண்டு மகிழ்கிறோம்.

சிலர் பிறந்த நாள் கொண்டாட்டத்தை மிக ஆடம்பரமாகக் கொண்டாடி, உணவு வகைகளை வீணாக்குகிறார்கள். "பணம் இருக்கிறது. நான் செய்தால் மற்றவர்கள் ஏன் வயிறெரிகிறார்கள்" என்று சிலர் கேட்கலாம். எதையும் அளவுக்கு அதிகமாகச் செய்வது அல்லது வீணாக்குவது நமக்கு நல்லதன்று. சூழலுக்கும் நல்லதன்று.

விளக்கை வாயால் ஊதி அணைப்பது சைவத் தமிழ்க் கலாசாரம் அன்று. விளக்கு ஒளி கொடுப்பது; இருளை அகற்றுவது. ஆனால் நாம் அதை அவித்து, ஒளியை அகற்றுகிறோம். நம்முடைய பெயரையே நாம் வெட்டித் துண்டாக்குகிறோம். இது நல்லதா, சரியா, நம் கலாசாரத்துக்கு ஏற்றதா என்பவை சிந்திக்கவேண்டியவை.

பிறந்தநாளைக் கொண்டாடக்கூடாது என்பது எமது கருத்தன்று. பிறந்த நாளை நல்ல முறையிலே கொண்டாடினால், நாலுபேருக்கு நன்மை செய்தால் அது நமக்கு நன்மை பயக்கும். பிறந்த நாளன்று பயன்தரும் செயல்களைச் செய்வதால் நாம் செய்யும் நற்செயல் நல்ல முறையில் நம்மை வாழவைக்கும்.

**க ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| கானப்பேர் அண்ணல் | 03 |
| பேர்லினில் நந்தி | 06 |
| சேற்றில் விழுந்த யானையை........ - கந்தபுராணச் சிந்தனைகள் | 07 |
| வற்றாப்பளை அம்மன் - பயணக்கட்டுரை | 09 |
| திருமுறைகளும் தேவாரமும் | 14 |
| திருக்குறட் கதைகள் | 17 |
| சங்ககால ஊர்திகள் | 31 |
| குறள் காட்டும் இறைவழி | 34 |
| கண்ணனும் தாத்தாவும் | 38 |
| Hinduism in search of Answers | 43 |
| ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் | 47 |
| குடை, கைத்தடி, செருப்பு | 48 |


**அட்டைப்படம்: அருள்மிகு கனகதுர்க்கை அம்பாள், ஈலிங்**

# கானப்பேர் அண்ணல்

வித்துவான் க வேந்தனார்

ஈசனை நேசம் நிறைந்த நெஞ்சுடன் நெக்கு நெக்குருகி வழிபடல் வேண்டும். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கவேண்டும். பூவும் நீருந் தூவிப் புகழ்ந்து பாடி ஆடவேண்டும். ஈசனைக் காதலன்பு கனியக்கனிய வழிபடுகின்ற இன்பமே மேலான இன்பம். "கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறல்" உடையவராய் மெய்யடியார்கள் விளங்குவர். ஈசனின் இன்னருளை எண்ணி வழிபடும்போது எழுகின்ற ஆனந்தப் பெருக்கினை, நுகர்ந்து நுகர்ந்து ஆவி தளிர்ப்பெய்துகின்ற இன்பத்தையே அடியார்கள் விரும்புவார்கள்.

"பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்து
ஆடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும் நான் போற்றி"

என மணிவாசகனார் ஈசனை இரந்து வேண்டுகிறார். ஈசனையே என்றும் பாடித் தொழுது பரவுகின்ற பாலறாவாயராகிய திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கானப்பேரில் எழுந்தருளி யிருக்கும் ஈசனைத் தொழச்சென்றார். சென்றவர் அங்கோர் திருவருட் காட்சியைக் கண்டார். கண்டதும் உள்ளம் களித்தார். இறவாத இன்பஅன்பின் இயல்பை உணர்ந்தார்.

### பெருங்கைமா

ஒரு பெரிய களிறு, பிடிகள் தன்பின்னே வரத் திருக்கானப்பேர்த் திருக்குளத்தை நோக்கி வருகின்றது. மிக விரைவாக வருகின்றது. வருகின்ற நேரமோ விடியற்காலம். விடியற் காலத்திலே தன்னைத் தொடரும் பிடிகளையும் பொருட்படுத்தாமல் பெரிய கையையுடைய மதக்களிறு ஏன் திருக்குளத்தை நோக்கி வருகின்றது என்ற எண்ணத்துடன் திருஞானசம்பந்தர் சிந்தித்தார். அவரின் சிந்தனை தெளியுமுன்னர், வந்த களிறு பொய்கையில் இறங்கி நீராடியது. பிடிகளும் நீராடின. நீராடிக் கரையேறிய களிறு சோலையிற் புகுந்து மலர்களைக் கொய்தது. தன் மூச்சுக்காற்றும் எச்சிலும் மலர்களிலே படாதவண்ணம் மிகமிகப் பாதுகாவலாய் அம்மலர்களை ஏந்தியவண்ணம் அக்களிறு கானப்பேரில் எழுந்தருளிய கடவுளின் திருமுன்னிலையிற் சென்றது. மலர்களைத் தூவி வழிபட்டது.

### பிடியெலாம் பின்செல

பெரிய துதிக்கையை உடைய களிறு; அழகும் ஆண்மையும் வாய்ந்த களிறு; அதன் அழகினாற் கவரப்பட்ட பிடிகள் அதனை விட்டு விலகாமற் தொடர்ந்து திரிகின்றன. பிடிகளின் பெண்மையை நயந்து நுகருகின்ற இன்பத்திலும், கானப்பேர் அண்ணலைப் பூத்தூவி வழிபடுகின்ற இன்பத்தையே களிறு மேலாக மதித்தது. மதம் மிக்க பெருங்கைக்களிறு போக நுகர்ச்சியிலும் ஈசனை வழிபாடு செய்யும் ஞான நுகர்ச்சியுடையதாய்ச் செயல் புரிகின்றது. பிடிகள் எல்லாம் பின்தொடர்ந்து வருகின்றபோதும், அவற்றைத் திரும்பியும்கூடப் பார்க்காமல், விரைந்து திருக்குளத்தை நோக்கிச் செல்லுகின்ற களிற்றின் தவநெறித் திருவின் மேம்பாட்டை உணர்த்தப் பிடியெலாம் பின்செல என்றார். தன்னிடம் எய்துகின்ற சிற்றின்பத்தையே நாடிவந்த பிடிகளையும் ஈர்த்து ஈர்த்துச் சென்று பேரின்பக் கூடலுக்கு வழிப்படுத்துகின்ற களிற்றின் மெய்யுணர்ச்சித் திறத்தை அடிகள் எமக்குக் குறிப்பாக் காட்டுகின்றார். பெற்ற சிற்றின்பத்தையே பேரின்பமாகக் கொள்ளும் களிற்றின் செயலை நாம் சிந்திக்கவேண்டும்.

**விடியலே தடமூழ்கி**

கதிரவன் தோன்றாத விடியற் காலத்திலேயே பெருங்கைக்களிறு துயிலெழுந்துவிட்டது. "வைகறை யாமந் துயில் எழுந்து" தான் செய்யவேண்டிய நல்லறத்தையும் ஒண்பொருளையும் களிறு சிந்தித்துவிட்டது. கானப்பேர்த் திருக்குளத்தில் கடுங்குளிரையும் தாங்கிய வண்ணம் களிறு மூழ்குகின்றது. களிற்றைத் தொடர்ந்து வந்த பிடிகளும் தம் தலைவனாகிய களிற்றையே தாமும் பின்பற்றி, கொண்டானை அல்லாது அறியாக் குலமகளிரைப்போல திருக்குளத்தில் மூழ்கின. "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே" என்ற நிலையைப் பிடிகள் எய்திவிட்டன. இந்த நிலைதான் "ஒருவனைப் பற்றி ஓரகத்தில்" இருத்தல் என்னும் உயர்நிலையாகும். களிறு, இறைவனையும், பிடிகள் அவ்விறைவனையே தலைவனாகக் கொண்ட ஆருயிர்களையும் குறிப்பாகக் காட்டுகின்றன. "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என இறைவனிடம் தம்மை முழுவதும் ஒப்புவித்து நிற்கின்ற ஆருயிர்கள்போலப் பிடிகளும் தம்மை முழுதும் களிற்றிடம் ஒப்புவித்து, அதன் செயலையே தம் செயலாகக் கொண்டு வாழ்கின்றன என்பதை உணர்கிறோம். "விடியலே தடம் மூழ்கல்" காலங்கடத்தாமல் உலகப்பற்றில் நின்றும் தம்மை விடுவித்துக்கொண்டு, "நாச்செற்றுவிக்குள் மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும்" என்னும் மெய்யயுரைப்படி இறைவன் திரு வருளிற் கலந்து நிற்றலைக் குறிக்கும்.

**விதியினால் வழிபடும்**

ஈசனை வழிபடும்பொழுது மனம், மெய், மொழி என்பது தூய்தாய் ஒருநெறிப்பட்டு நிற்றல் வேண்டும்.

கையொன்று செய்ய விழியொன்று
நாடக் கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று
பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சார செவியொன்று
கேட்க விரும்பும் யான்
செய்கின்ற பூசை எவ்வாறு
கொள்வாய் வினை தீர்த்தவனே

எனவரும் பட்டினத்தார் பாடலை நோக்குக. மனத்தில் அன்பும் தூய்மையும் இன்றிப் புறத்தே பூத்தூவி நீராட்டிப் புகழ்ந்து போற்றி இறைவனை ஏத்துகின்ற வழிபாடு, பிறரை மயக்கும் பொய்வழிபாடாகும். இப்பொய்யரின் வழிபாட்டை எண்ணி இறைவன் நகைப்பான். "பொக்க மிக்கவர் பூவும் நீருங் கண்டு நக்கு நிற்பர்" என்பது தேவாரம். மதம் மிக்க பெருங்கைக் களிறு இறைவனை மெய்யன்புடன் வழிபாடு புரிகின்றது. வண்டுதாத நாண்மலர்களை ஆய்ந்து கொய்து, அயராத் தூய அன்புடன் தூவி வழிபடுகின்றது. களிற்றுடன் கூடிப் பிடிகளும் விதியால் வழிபடுகின்றன. "பிடியெலாம் பின்செல" என்பதால் களிறு ஆற்றுகின்ற செயல்களையெல்லாம் அப் பிடிகளும் பின்பற்றுகின்றன என்பதை உணரலாம்.

**கடிஉலாம் பூம்பொழில்**

களிறு பூக்கொய்த பூஞ்சோலையும் என்றும் மாறாத நறுமணத்தையே வீசியவண்ணம் விளங்குகின்ற தெய்வத்தன்மை கொண்டது. இறைவனை வழிபாடு புரிதற்குப் பொருத்தமான பூக்களைப் பூத்து விளங்கும் புதுமையுடையது அப்பூம்பொழில் என்பதை உணர்த்தக் "கடியுலாம் பூம்பொழில்" என்றார். இறைவனுக்குத் தூவி வழிபடுதற் பொருட்டே பூம்பொழிலின் பூக்கள்

மலர்ந்துள்ளன என்பதைத் தெய்வ மணம் வீசிப் புலப்படுத்தும். இறைவனுக்கு இட்டு வணங்கும் பூக்களில் வண்டுகளும் மொய்யா என்று மேலோர் கூறுவர். "சுரும்பும் மூசாச் சுடர்பூங் காந்தள்" என்பது திருமுருகாற்றுப்படை. கானப்பேரிலுள்ள பூஞ்சோலை இறைவனுக்கு இட்டு வழிபாடு புரிதற்குப் பொருத்தமான தெய்வத் தன்மைவாய்ந்த பூக்களையே பூத்திருக்கும் என்பதாம். அப் பூக்களைக் கொய்து ஏந்திச்சென்று வழிபடாமல் இருப்போரைப் பெருங்கைக் களிறு ஊக்கி வழிகாட்டுகின்றது. பூக்களும் தெய்வமணத்தை எங்கும் பரப்பித் தம்மைக் கொய்து, கானப்பேரில் எழுந்தருளும் கடவுளின் திருவடிகளில் இட்டு வணங்கும் வண்ணம் அன்பர்களை அழைக்கின்றன.

**அண்ணல்**

அண்ணல் - பெருமையுடையவன். தன்னை அடைந்தாரைத் தானாக்கித் தண்ணருள் புரியும் தலைமைப்பாடு உள்ளவன். "அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே" என்பது திருவாசகம்.

**அடியலால் அடைசரண் உடையரோ அடியர்**


கானப்பேர் அண்ணலின் அடிகள்தாம் அவனடியார்க்குப் புகலாக உள்ளன. அண்ணலின் அடிகளை அடையாதார் பிறவிப் பெருங்கடலைக் கடக்கமாட்டார். பிறவிக் கடலைக் கடந்து பேரின்பக் கரையை அடைதற்குத் தெப்பமாக உள்ளவை இறைவனின் திருவடிகளேயாகும். உலகத் தாக்கங்களினால், அலைக்கப்பட்டு அல்லல் உற்றவர்கள் இறைவனின் திருவடிகளையே புகலாகக் கருதி அடைக்கலம் புகுவார்கள். அங்ஙனம் அடைக்கலம் புகுந்த அடியார்களை ஆதரித்து ஆட்கொள்ளும் பெருங்கருணைத் தடங்கடலாக இறைவன் விளங்குகின்றான். உலக போகங்களால் எய்திய துன்பத் தீயின் வெம்மை போகவேண்டுமானால், இறைவனின் கருணைக் கடலிலே படியவேண்டும். கருணைக் கடலிலே படியும் பெருவாழ்வைப் பெற விரும்புவோர் அவனின் திருவடிகளையே புகலாகக் கொள்வேண்டும். "அருள் புரிவாய் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே" என மாணிக்கவாசகர் இறைவனிடம் அடைக்கலம் புகுகின்றார். உன் அடைக்கலம் என்பதன் பொருள், நின் திருவடிகட்கு யான் அடைக்கலம் என்பதேயாகும். இறைவன் திருவடிகளைத் தொழுவதால்தான் தீவினைகள் நீங்கும். "ஈசன் கழல்களை நிறையால் வணங்க நில்லா வினைகளே" என்றும் "ஈசன் கழல்களை மருவாதவர்மேல் மன்னும் பாவமே" என்றும் திருஞானசம்பந்தர் கூறியிருத்தலையும் நோக்குக.

அடியார்களுக்கு என்றும் போகாப் புகலாய் உள்ளது இறைவன் திருவடிகளே என்ற உண்மையை மறவாமல் உலக போகங்களில் ஈடுபடும் மக்கள் மனதில் பதிக்கவேண்டும், அவர்களை இறைவனுக்கு ஆளாக்கவேண்டும், ஆளாக்கி அவனருளே கண்ணாகக் கொண்டு வாழும் பெருநெறியில் ஈடுபடுத்தவேண்டும் என்ற இரக்கத்தால், அடியலால் அடைசரண் உடையரோ எனத் திருஞானசம்பந்தர் மலர்ந்தார்.

**பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ**
**விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்**
**கடியுலாம் பூம்பொழிற் கானப்பே ரண்ணல்நின்**
**அடியலால் அடைசரண் உடையரோ அடியரே**

**குறிப்பு:**

பிடி - பெண்யானை, பெருங்கைமா - பெரிய கையையுடைய களிறு, தழீஇ - ஏந்தி, விடியல் - கதிரவன் தோன்றுதற்குக் கிட்டிய நேரம் (வைகறை), தடம் - பொய்கை, விதி - முறை (ஒழுங்கு), கடி - வாசனை (மணம்), பூம்பொழில் - பூஞ்சோலை, சரண் - அடைக்கலம்



# பேர்லினில் நந்தி

ஞாலக்கோன்

சென்ற 2019 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி ஜேர்மனியின் தலைநகரான பேர்லினுக்குப் போயிருந்தேன். அங்கே பேர்கமன் அருங்காட்சியகம் (Pergamon Museum) உள்ளது. உள்ளே ஒலி வழிகாட்டி (Audio Guide) உதவியுடன் பார்த்து வரும்பொழுது நந்தி ஒன்று இருந்தது. பழைய இராணுவ வீரர்களுக்கு நந்தி பொறிக்கப்பட்ட பதக்கம் வழங்கப்பட்டது. அது வட்ட வடிவில் அல்லது வளைந்த பிறை வடிவில் இருக்கும். அதை வைத்து அந்த இராணுவ வீரர் எந்தப் பதவியில் உள்ளவர் என்று அறியலாம் என்று தகவல் கூறியது. ஆனால் எந்த நாட்டு இராணுவம் என்பதைச் சொல்லும் பகுதி தெளிவாக இல்லை. பின்னர் நந்தியின் பக்கத்தில் ஜேர்மன் மொழியில் துண்டுப்பிரசுரம் ஒன்று இருப்பதைக் கண்டேன். அதை எடுத்துவந்து என் நண்பர் திரு கிறிஸ் அரசகேசரி அவர்களின் உதவியுடன் மொழிபெயர்த்துக் கீழே தந்திருக்கிறேன்.

ஹம்போலட் கருத்துப் பரிமாறல் அரங்கில் முக்கியத்துவம் அளிக்கப்பட்ட நந்தி, சிவபெருமானின் (Reittier) வாகனம். மரத்தால் ஆனதும், வர்ணமயமானதும் ஊர்வலத்தில் காணப்பட்டதுமான இந்த நந்தி / ரிஷபம் 18ஆம் நூற்றாண்டு தென்னிந்திய தமிழ் நாட்டில் / தென்னாசியாவில் நிர்மாணிக்கப்பட்டு 1987இல் பேர்லின் அரச அருங்காட்சியகத்தில் நிறுவப்பட்டதுமாகும். இந்து சமய மரபின்படி ஏரி முதுகினைக் கொண்ட இவ்வகை நந்தி எப்போதுமே சிவபெருமான் அருகிலேயே பிரசன்னமாய் இருக்கும். சித்திர வடிவங்களில் நந்தி சிவபெருமானின் பக்கத்திலோ அல்லது அவர் ஆரோகணித்து எழுந்தருளும் ரிஷபவாகனமாகவோ சித்திரிக்கப்படுகின்றது.

சிவன் கோயில்களில் உள்ள உட்பிரகார நுழைவாயில்கள் தாண்டியதும் நாம் முதலில் எதிர்கொள்ளும் பிரதான வழிபாட்டுத் திருவுருவம் நந்தியே. எமக்குத் தென்படுவதும் நந்தியே. தன் எஜமானராகிய சிவபிரானுக்கு நந்தி காட்டும் பக்திவிஸ்வாச அர்ப்பணிப்பைச் சிவன் அடியார்கள் பக்தி விஸ்வாசத்தின் உதாரணமாக மதிப்பர். அத்துடன் சிவபக்தர்கள் தாம் வேண்டிநிற்கும் வரங்களைச் சிவபிரானிடத்தே விண்ணப்பிக்கும் ஓர் ஊடகமாகவும் நந்தியை வழிபடுவர்.

மரத்தினாலும் உலோகத்தினாலும் நிர்மாணிக்கப்பட்ட நந்தி வாகனங்கள் சிவபெருமானதும் அவர்தம் சக்தியினதும் திருவுருவங்கள் ஆரோகணித்து எழுந்தருள உபயோகிக்கப் படுவதுண்டு. தென்னிந்திய ஆலயங்களில் திருவுருவங்களின் உட்பிரகார வலங்கள் அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகும். உற்சவ காலங்களில் திரு உருவச்சிலைகள் விசேடமாக அலங்கரிக்கப்பட்டு உரிய வாகனங்களிலோ அல்லது பக்தர்களின் தோள்களிலோ கோயில் வெளிப்புறத்திலும் பகிரங்க வீதிகளிலும் எழுந்தருளுதலைக் காணலாம். இத் தருணங்களில் சகலரும் வேறுபாடின்றி இறைதரினம் செய்ய முடியும்.



← றொறன்ரோ சைவக் கோயில் ஒன்றில் மாசி மகத் திருவிழா சுவாமி ரிஷப வாகனத்தில் எழுந்தருளல்.

→ பெண்ணொருவர் நந்தியிடம் வரம் வேண்டும் காட்சி. நந்தியின் மேலுள்ள வஸ்திரங்களும் பாதத்தில் சிந்தியுள்ள மலர்களும் பக்தர்கள் செலுத்திய காணிக்கை



# சேற்றில் விழுந்த யானையைக் காகமும் கொத்தும்

## கந்தபுராணச் சிந்தனைகள்

கலாநிதி சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

பெருவலி படைத்தவர்கள் ஏதாவது ஒரு வில்லங்கத்தில் அகப்பட்டுக் கொண்டால் மிகவும் சாமானியர்கள் கூட அவர்களில் குறை காண்பார்கள். யானைபோலப் பெரு வலிமை படைத்தவராயினும் ஊழல் எனும் சேற்றில் அகப்பட்டால் காகம் போல எளியவரும் தாக்குவார்கள். ஆகையால் ஊழல் என்னும் சகதியில் மாட்டிக் கொள்ளக் கூடாது. பதவியில் இருப்பவர்கள் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்ற பாடத்தைக் கந்தபுராணம் சொல்லா நிற்கிறது.

வீரவாகு தேவர் மகேந்திரத்துக்குத் தூது போய், யுத்தததுக்கு ஆயத்தமாக இருக்கும்படி சொல்லிவிட்டு, மகேந்திரபுரியையும் அழித்துவிட்டு வருகிறார். அதன் பிறகு சூரன் மந்திரா லோசனைக்கு எல்லோரையும் கூப்பிடுகின்றான். அவனுடைய பெருவாழ்வு அழியுமென எவரும் நினைக்கவுமில்லை.

சூரனும் எவருக்கும் அஞ்சினவனல்ல. அவனும் இயற்கையாக யுத்தத்தையே விரும்பினான். எல்லோரும் அதையே ஒத்தூதினார்கள். சிங்கமுகாசுரன் மட்டும் தேவர்களைச் சிறையில் வைத்திருப்பது பிழை, அவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து யுத்தத்தைத் தவிர்ப்பதே நல்லது என்று சொல்கின்றான். அவனைச் சூரன் இகழ்ந்து பேசி அடக்கிவிடுகின்றான். யுத்தம் தொடங்குகிறது. அசுரப்படைகள் தொடர்ந்து தோற்றுக் கொண்டு போகின்றன. மூன்றாம் நாள் பானுகோபன் யுத்தத்துக்குப் புறப்படுகின்றான். பாட்டியான மாயையை நினைக்கின்றான். அவள் வருகின்றாள். “என்ன வேண்டும்?” எனக் கேட்கின்றாள். தான் முதல் நாள் வீரவாகுத்தேவரிடம் தோற்றுவிட்டதாகவும், அவரை வெல்லுவதற்கு உதவும்படியும் கேட்கிறான். முதன்முதலாகச் சூரபத்மன் ஆட்சியில் குற்றம் சொல்லப்படுகிறது. மாயை, “நீ வேதமார்க்கத்தை விலக்கினாய். தேவரைச் சிறையிலடைத்தாய். இந்திரன் முறைமைகளை அழித்தாய். முனிவர் செய்யும் தவங்களைக் குறையும்படி செய்தாய். கொடுமையைப் பாதுகாத்தாய். இடைவிடாமல் உயிர்கள் போற்றும் மும்மூர்த்திகளும் உனக்குப் பகைவர், முனிவருடனே தேவர்களும் பகைவர், அதனால் வானத்திலே உள்ளவர்கள் எல்லோரும் பகைவரானால் நீ எவ்வாறு வாழ்வாய்?” என்று சொல்கிறாள்.

ஓவருந் தன்மையால் உயிர்கள் போற்றிடும்
மூவரும் பகையெனின் முனிவர் தம்மொடு
தேவரும் பகையெனின் சேணில் உற்றுளோர்
ஏவரும் பகையெனின் எங்ஙன் வாழ்தியால்

-மூன்றாநாட் பானுகோபன் யுத்தப்படலம் -6

மாயை இதை இதற்குமுன் என்றுமே சொன்னதில்லை. சுக்கராச்சாரியாரின் அறிவுறுத்தலின்படி தேவரை மேற்கொள்வதற்காகத்தான் காசிபரை மயக்கிச் சூரனையும் மற்றையோரையும் பிள்ளை களாகப் பெற்றதையும், கடும் வேள்வி செய்து பெருவரங்கள் பெறச்செய்ததையும், அதன் பிறகு தேவர்களை எதிர்த்துத் திக்விஜயம் செய்யும்படி சொன்னதையும் மாயை நினைவுகூரக்கூட

இல்லை. பானுகோபன் விட்ட மாயா பாசத்தினால் கட்டப்பட்ட வீரவாகுத்தேவரும் பூதப்படைகளும் மகேந்திரபுரியைத் தாக்குகின்றன. நகர் எரியூட்டப்படுகிறது. ஒற்றர்கள் வந்து பூதப்படையின் உக்கிரமான தாக்குதலைப்பற்றிச் சொல்கிறார்கள். சூரன் அவர்களைத் தாக்கப் புறப்படுகிறான். முன்னர் மந்திராலோசனையின்போது, “சூரபத்மன் ஒரு மழலைச் சொல்லைப் பேசும் சிறுவனின் போர் வன்மையைக் கண்டு இரங்கினான் என்ற சொல் பிறக்குமானால் உன்னை நினைத்து நடுங்கிய பகைவர்களும் உன்னை இகழ்வார்கள். போர் செய்தலே சரி” என்று சொன்ன இரண்யன் சொல்கிறான், “நாம் தேவரைச் சிறையிலே இட்டதால் உண்டானது பாவமே. இதனால் நன்மை ஒன்றும் இல்லை. எல்லாவற்றையும் உணர்ந்த மன்னா! நம் உயிரானது அழிவது உறுதியே ஆகும். நம் செல்வமும் அழிந்து போகும்.”

தேவரை நாம்சிறை செய்த தன்மையால்
ஆவது பாவமே ஆக்கம் வேறில்லை
யாவையும் உணர்ந்திடும் இறைவ திண்ணமே
போவது நம்உயிர் திருவும் பொன்றுமால்

-இரணியன் யுத்தப் படலம் 5

தொடர்ந்து இரணியன் தேவரைச் சிறையிலிருந்தும் விடுவிக்கக் கூறுகிறான். கடுங்கோபமடைந்த சூரனால் பேசவிடாது தடுக்கப்படுகிறான். இவ்வாறாகச் சூரனுடைய செய்கைக்கு ஆதரவாக இருந்த மகனே நிலைமை கஷ்டமாக மாறியதும் சூரனுடைய செய்கையைத் தாக்குகிறான்.

யுத்தத்திலே பானுகோபன் இறந்துவிட்டான். சூரன் கலங்கிப்போனான். புரண்டு உருண்டு அழுகிறான். சூரனுடைய மனைவி, பானுகோபனுடைய தாய், அழுகின்றாள். அவள், “நொந்து கிடக்கும் தேவர்களுக்குத் துன்பத்தை செய்வது நல்லதல்ல என்று சொன்னேன்.. உன் தந்தை கேட்கவில்லை.” என்று சொல்லுகின்றாள்.

நையா நிற்கும் தேவர் தமக்கு நனிதுன்பஞ்
செய்யா நிற்றல் நன்றல தென்றேன் அதுதேரா
தையா நின்னைத் தோற்றனன் மன்னன் அவனுந்தான்
உய்வான் கொல்லோ தன்னுயிர் தானும் ஒழியாதே

-பானுகோபன் வதைப்படலம் 204

இவ்வாறாகத் தாய், மகன், மனைவி எல்லோரும் சூரனுடைய செய்கையை அவன் வலியிழந்து கொண்டு வரும்போதே தாக்கினர். அவன் வலியோடிருந்த காலத்தில் இவர்கள் சூரனுடைய செய்கைக்கு சேர்ந்தூதியவர்கள். இதனாலேயே வலியோடிருப்பவர்கள் சேற்றில் விழும் நிலைக்கு வராது தம்மைத்தாமே காத்துக்கொள்ள வேண்டுமெனக் கந்தபுராணம் சொல்லா நிற்கிறது.

# நம்மை ஆட்கொண்டதே

**சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியிற் சந்திரனை**
**வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்**
**தேட எடுத்தது தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்**
**ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே**

**- திருநாவுக்கரசர் திருமுறை -4**

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில்



## பயணக் கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்.

**முன்னுரை**

வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் தண்ணீரூற்று என்ற இடத்திலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. தண்ணீரூற்று என்ற இடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்றது.

கண்ணகி மதுரையை எரித்தபின் இந்தியாவில-ிருந்து இலங்கை வந்து இளைப்பாறிச் சென்ற இடங்களில் பத்தாவது இடமே நந்திக் கடற்கரை ஓரமாகும். இதனால் பத்தாம் பளை - பத்தாவது பளை (பளை - ஓரம்) என்ற பெயர் மருவிப் பற்றாப்பளை ஆகியதென்றும் காலப்போக்கில் அது வற்றாப்பளையாக மாறியதென்றும் நம்பப் படுகிறது. மேலும், J P Lewis என்பவர் தனது Manual of The Vanni District என்ற நூலில் ஒருபோதும் நீர் வற்றாத இடம் வற்றாப்பளை என்று கூறியுள்ளார்.



நந்திக் கடல்வெளியில் கண்ணகி இடைச் சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்தாள். அவர்கள் கேட்டபடி தனது பசிக்கு அவர்கள் கொடுத்த பொங்கலை ஏற்றுக்கொண்டாள். தனது தலையிலே உள்ள பேனை எடுக்கும்படி சிறுவர்களுக்குக் கூற, சிறுவர்கள் தலையில் ஆயிரம் கண்களைக் கண்டனர். பின்னர் பொழுது சாய்ந்தபொழுது விளக்கேற்றி வைக்குமாறு சிறுவர்களிடம் கோரினாள். சிறுவர்கள், “விளக்கேற்றுவதற்கு நெய் இல்லையே” என்று சொல்ல, கடல் நீரால் விளக்கேற்றுமாறு சொன்னாள். சிறுவர்களும் அப்படியே செய்தனர். கடல் நீரில் விளக்க எரியும் அற்புதத்தைக் கண்டு சிறுவர்கள் வியந்தனர். முடிவில், தான் ஒவ்வொரு வைகாசிமாத விசாக நட்சத்திரத்தன்றும் வற்றாப்பளைக்கு வருவதாகக் கூறி மறைந்தாள். சிறுவர்கள் பெரியோரிடம் இந்த விவரத்தைக் கூற, அவ்விடத்தில் கோயில் ஒன்று கண்ணகிக்கு உருவானது. கண்ணகி வழிபாடு ஆரம்பமாகியது. இந்த விவரங்களை அம்மன் சிந்து பின்வருமாறு குறிப்பிடுகிறது:

“பேரான முள்ளியவளைப் பதியில் வந்துறைந்தாய்
தந்தி முகக் கோயிலில் வந்து மடைகண்டு
தார்கடல் உப்புத் தண்ணீர் விளக்கேற்றி
அந்திப் பொழுதிலே நந்திக் கடற்கரையில்
வைகாசித் திங்களில் வந்தமர்ந் தாயே
அடவிக் கடற்கரையில் விடுத்தி விடவந்தாய்
அழகான மாட்டிடையர் கண்ணில் அகப்பட்டாய்
பாரப்பா என்தலையில் பேனதிகம் என்றாய்
அழகான தலையதனைப் பிளவாய் வகிர்ந்தாய்
பாங்கான கண்களோ ராயிரமுண்டு”..

**பயணம்**

2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி. அன்று பங்குனி மாதப் பிறப்பு. முதலாவது பங்குனித் திங்கள் நாளாகும். சாவகச்சேரியில் எமது வீட்டில் அதிகாலை 3 மணிக்கு எழுந்து நீராடி, காலை 4.30 மணிக்கு நமது நெருங்கிய உறவினருடன் வாகனத்தில் புறப்பட்டோம். அதிகாலை கடைகள் திறக்கும் நேரம் புதுக்குடியிருப்பை அடைந்தோம். அந்தக் கடைகளில் நமது வழிபாட்டுக்குத் தேவையான அர்ச்சனைப் பொருள்கள், பழவகைகள், கர்ப்பூரம் ஆகியவற்றை வாங்கினோம். பொங்கல் படைப்பதற்கான வாழையிலை எந்தக் கடையிலும் கிடைக்கவில்லை. போகும் வழியில் அது கிடைக்கும், வாங்கிக்கொள்ளலாம் என்றார்கள். அவர்கள் சொன்னதுபோல மிக அருகில் வாழைமரங்கள் நிறைந்த ஒரு வீட்டைக் கண்டோம். அந்த வீட்டுக்காரரை அணுகி வாழையிலை கேட்டோம். அவரோ தாராளமாக எடுங்கள் என்று சொல்லி நிறைய வாழையிலை வெட்டிக் கொடுத்தார். பணம் ஏற்க மறுத்துவிட்டார். கோயிலுக்கு என்று கேட்டதால், அந்தப் புண்ணியத்துக்குத் தன் பங்காக அது இருக்கட்டும் என்று அவர் நினைத்திருக்கலாம். அவரின் பண்பைக் கண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன்.

காலை 8.30 மணியளவில் நாங்கள் கோயிலை அடைந்தோம். அங்கு பொங்கல் செய்வதற்கான மண்டபத்தை அடைந்து என் மனைவியும் ஏனையோரும் பொங்கல் வேலையை ஆரம்பித்தார்கள். கோயிலைச் சுற்றிப் பார்ப்போமென நான் தனியாகச் சென்றேன். படைக்கும் இடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, முன்னால் இருக்கும் சுதை வடிவில் இருக்கும் அம்மன் உருவத்தைப் பார்த்தேன். அம்மன் தன் விழிகளால் என்னைப் பார்த்து விளித்து, கண்ணைச் சிமிட்டி ஆனந்தமாக அழைப்பதுபோல் இருந்தது. அது ஒரு பரவசமான, ஆனந்தமான, புதுவிதமான அநுபவமாக இருந்தது. இதைத்தான் "கல்லும் கதை பேசும்" என ஆன்மிகவாதிகள் கூறினர்போலும்.



சிறுவயதில் ஒரேயொரு முறைதான் நான் பெற்றோருடன் இந்தக் கோயிலுக்குச் சென்றிருக்கிறேன். இம்முறை, பல வருடங்கள் ஆகிவிட்டதே, இந்தக் கோயிலை இன்னொருமுறை சென்றுதான் பார்ப்போமே என்னும் ஒரு சிறு சிந்தனை வந்ததனாலேயே சென்றேன். அம்பாளின் அருட்கண் பார்வையால் ஒவ்வொரு முறையும் பங்குனித் திங்களுக்கு அங்கு செல்லவேண்டும் என்று அப்போதே தீர்மானித்தேன். இதை எழுதும்போது, என்னை அறியாமலேயே ஆனந்தக்கண்ணீர் பொல பொலவென்று வழிகிறது. அற்பனாகிய எனக்கே இவ்வளவு கடாட்சம் என்றால், சித்தர்கள், நாயன்மார்கள் எவ்வளவு இறையுணர்வு பெற்றிருப்பார்கள்? அவர்கள் திருப்பாடல்களை அருள இறைவனே அடியெடுத்துக் கொடுத்தார் என்பதை என்னால் நம்பமுடிகிறது. அவர்களுக்கு இறைவன் எவ்வளவு அருள்பாலித்திருப்பார்.

நாங்கள் பொங்கியது சாதாரண பொங்கலும் சாம்பாருந்தான். படையல் செய்யும்போது என்னை அழைத்துக் கல்லில் தேங்காய் உடைக்கச்சொன்னார்கள். உடைத்தேன். என்ன ஆச்சரியம்? தேங்காய் கத்தியால் உடைத்ததுபோலச் சரிபாதியாக உடைந்தது. இப்படி முன்பு எப்போதும் தேங்காய் உடைந்ததில்லை.

சர்க்கரைப் பொங்கலைச் சுவைத்த மக்கள் போட்டிபோட்டு, முண்டியடித்து நாங்கள் செய்த பொங்கலையும் வாங்கிச் சுவைத்தனர். கோயிலின் பின்னால் இருந்த மரத்தடியில் அமர்ந்து பொங்கலை உண்டு சிறிது நேரம் இளைப்பாறியபின் அங்கிருந்து புறப்பட்டோம்.

பங்குனித் திங்கள் - பெரிய திருவிழா அன்று - என்றாலும் கோயில் அருகில் கடைகளுக்குப் பஞ்சமில்லை. வடை, தேநீர், குளிர்பானம் விற்கும் கடைகளும் சிறு பிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைகளும் கடலை, ஐஸ்கிறீம், கற்பகதருவான பனையிலிருந்து பெறப்படும் பொருள்களான பனங்கட்டி, பாய், பனை ஓலையிற் செய்த கிலு கிலுப்பை, பிட்டு அவிக்கும் நீத்துப்பெட்டி போன்றவை விற்கும் கடைகளும் இருந்தன.

திரும்பி வரும் வழியில் முள்ளிவாய்க்காலில் நின்று சிறிதுநேரம் வணங்கினோம். அருகில் இருந்த போர் அருங்காட்சியகத்தையும் பார்த்தோம். பின்னர் அருகிலிருந்த தாளையடி அம்மன் ஆலயத்தை அடைந்து வழிபட்டோம். அங்கே தயிர்ச்சாதமும் அம்மனின் பிரசாதமான பாற்கஞ்சியும் கொடுத்தார்கள். பனையோலையில் செய்த தொன்னையில் பாற்கஞ்சி பருகியது ஓர் அநுபவம். பின்னர் மகிழ்வுடன் வீடு திரும்பினோம்.

இரண்டாவது முறையாக 2017இல் ஏப்பிரல் மாதம் மூன்றாம் திகதி சென்றோம். இம்முறை அம்பாள் கண் காட்டவில்லை. அடுத்து 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி போனோம். அன்று இரண்டாவது பங்குனித் திங்கள். கோயிலை அழகாகத் திருத்திக் கட்டி கும்பாபிஷேகம் செய்தற்கு முதல் நாள். கணபதி ஹோமம், வயிரவர் சாந்தி, அம்பாள் வீதிவலம் யாவிலும் பங்குகொண்டோம். அவ்வளவாகக் கூட்டம் இல்லை. அதனால், தீபம், பூசினிக்காய், கத்தி என்று கிரியைகளுக்காக எடுத்துச் செல்லவேண்டிய பொருள்களை எடுத்துச் சென்று சிவாசாரியர்களுக்கு உதவி செய்யும் பேறு கிடைத்தது. அட்டதிக்குப் பாலகருக்கு மேள வாத்திய இசையொடு பூசை நடந்தது.

தண்ணீரூற்று ஆற்றங்கரையில் வாகனத்தை நிறுத்திப் பொங்கல் பிரசாதத்தை அருகில் சென்றவர்களையும் அழைத்துப் பகிர்ந்து உண்டோம். திரும்பும் வழியில் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் கோயில் சென்று மதிய பூசையின்போது வழிபட்டோம். பின்னர் முறிகண்டி பிள்ளையாரையும் வணங்கி வீட்டை அடைந்தோம்.

2019ஆம் ஆண்டுமார்ச் மாதம் முதலாம் திகதி மூன்றாவது பங்குனித்திங்கள் நாளன்று சென்றோம். கோயில் பிரமாண்டமாக வளர்ந்துவிட்டது. அடியார்களும் பெருமளவில் வந்திருந்தார்கள். பொங்கல் செய்யும் பக்தர்களும் அதிகம். திரும்பி வரும் வழியில் கிளிநொச்சி சென்று யோகர் சுவாமிகளுடைய சமாதியைத் தரிசித்து படங்களும் எடுத்துக்கொண்டு வீடு திரும்பினோம்.

**கண்ணகை அம்மன் கோயிலின் பெருமை:**
கண்ணகை அம்மன் அம்மை, பொக்குளிப்பான் (ஊாஉைமநிழஒ), கண் நோய் போன்ற தொற்றுநோய்களைத் தீர்ப்பாள் என்று மக்களிடை நம்பிக்கை உள்ளது. கோயிலில் வழங்கப்படும் விபூதி தீய வியாதிகளிலிருந்து காப்பாற்றும் என்பது அடியவர்களின் அநுபவமாகும்.

**கோயிலில் நிகழ்ந்த அற்புதங்கள்:**

கடல் நீரில் விளக்கு ஏற்றியமை
பட்டுப்போன படவாள் மரம் துளிர்த்து மரமானது
சிறுவர்களுக்குத் தலையில் ஆயிரம் கண் காட்டியமை
கோயிலின் பொருள்களைத் திருடியவர்களின் கண்பார்வை மறைந்தமை
பறங்கித் துரைக்கு புளிச்சமரத்தை அசைத்து, மரத்திலிருந்த காயால் அடித்தமை



**வைகாசிப் பொங்கல்:**

இடைச் சிறார்கள் கூறிய விவரத்தால் வைகாசிப் பொங்கல் ஆரம்பமாகியது. முதலில் எல்லாக் குலப் பிரிவினரும் இணைந்து வழிபட்டனர். பின்னர் பக்தஞானி என்னும் ஒரு கண்ணகி பக்தர் தஞ்சாவூரி லிருந்து இந்தக் கோயிலுக்கு வந்து கண்ணகி வழிபாட்டு முறையை ஏட்டில் எழுதி வைத்தார். இன்றுவரை இதைப் பின்பற்றியே பொங்கல் நடைபெறுகிறது. பாக்குத் தெண்டல் (பொங்கல் பற்றி ஊருக்கு அறிவித்தல்) தொடக்கம் பக்தஞானியாரின் பொங்கல்வரை பத்தொன்பது நாள்கள் நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்த விழாவில் கட்டாடி உடையார் அம்பாளின் உரு ஏற ஆடுவார். பச்சரிசியும் பசுப்பாலும் சேர்த்துப் பொங்கல் பொங்கப்படும். சர்க்கரை வெல்லம் சேர்ப்பதில்லை. உலா வரும்போது பறை, சங்கு, சேமக்கலம் போன்ற வாத்தியங்கள் ஒலி எழுப்பப்படும். அந்தணர் அர்ச்சனை செய்யும் முறை இக்கோயிலில் இல்லை. இக் கோயிலில் தற்போதும் கிராம வழிபாடாகிய பொங்கல், படைத்தல் எனப்படும் மரபு வழிபாட்டுக் கிரியைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. கட்டாடி உடையார் என்னும் பூசாரியாரும் பிற குலத்தொழிலாளரும் ஒழுக்கசீலராக இருந்து செயலாற்றி வருகின்றனர். பங்குனித் திங்கள் நடக்கும் பொங்கலைவிட இது பலமடங்கு விமரிசையாக நடக்கும் பொங்கல் நாளாகும். மக்கள் பெருமளவிற் கூடுவர். சிலர் தெருவிலேயே இரவில் கொண்டுவந்த பாயை விரித்துப் படுப்பர். இடமின்மையால் பல இடங்களில் பொங்கல் நடைபெறும். கடைகளும் பல அமைந்திருக்கும்.

**வைகாசி விசாகம்:**

இத்தினத்தை அனிலநாள், சோதிநாள் எனவும் கூறுவர். விசாகம் இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்று. பல சமயத்தவருக்கும் இது ஒரு புனித நாளாகும். நம்மாழ்வார் அவதார நாளும் விசாக நடசத்திரம். புத்தர் ஞானம் பெற்றதும் வைகாசி விசாகத்தன்றுதான்.

கால்நடையாகக் கதிர்காமம் செல்வோர் அம்பாளை வழிபட்டு, பிரசாதம் பெற்று தமது யாத்திரையைக் கோயிலின் உட்பிரகாரத்தில் தொடங்குவர். அம்பாளின் வழிகாட்டலில் வேல் தாங்கிய தலைமை அடியாரோடு பாடிக்கொண்டு யாத்திரை செய்வர்.

**கண்ணகி:**

தமிழ் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான “நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்” என்ற பெருமைபெற்ற காப்பியத்தின் காவியத் தலைவி கண்ணகி. சிலம்பினால் ஏற்பட்ட விளைவை அடிப்படையாகக் கொண்ட காவியம் என்பதால் சிலப்பதிகாரம் என்ற பெயர் பெற்றது. இளங்கோ அடிகளால் எழுதப்பட்ட இந்தக் காவியம் மூன்று காண்டங்களைக் கொண்டது.

**புகார்க் காண்டம்:**

கண்ணகி காவிரிப்பூம் பட்டினத்துப் பெருவணிகன் மாநாய்கனின் மகள். இலட்சுமி போன்ற அழகும் கற்பும் யாவரும் புகழும் பண்புகளும் கொண்டவள். கோவலன் அவ்வூரைச் சேர்ந்த வணிகன் மாசாத்துவானின் மகன். இவன் ஏழைகளுக்கு இரங்குபவன், நல்ல கலையுணர்வு

கொண்டவன். கோவலனும் கண்ணகியும் திருமணம் செய்து பூம்புகாரில் இனிதே இல்லறம் நடத்தி வந்தனர். பின்னர் மாதவி என்ற நடனமாதுடன் கோவலனுக்குத் தொடர்பு உண்டாகியது. அவன் கண்ணகியைப் பிரிந்து மாதவியுடன் வாழ்ந்தான். கண்ணகியின் வாழ்க்கை தடம்புரண்டது. நாளாக, கோவலன் தன் செல்வம் முழுவதையும் இழந்தான். ஏதுமற்றவனாக ஆனான். தன் தவற்றை உணர்ந்து தன் மனைவியான கண்ணகியிடம் மீண்டான். அவளும் அவனை அன்புடன் வரவேற்றாள்.



**மதுரைக்காண்டம்:**
புதிய வாழ்க்கை தொடங்க இருவரும் தீர்மானித்தனர். பணம் இன்மையால் கண்ணகியின் சிலம்புகளில் ஒன்றை விற்க முடிவெடுத்தார்கள். மதுரைக்கு இருவரும் சென்றனர். சிலம்பை விற்பதற்குக் கோவலன் ஒரு பொற்கொல்லனிடம் சென்றான். அந்தப் பொற்கொல்லன் பாண்டிமாதேவியின் சிலம்பைத் திருடியவன். கோவலன் கொண்டுவந்த சிலம்பு அதுபோல இருக்கவே, திருட்டுக் குற்றத்தைக் கோவலன் மீது சுமத்தினான். என்றும் நீதியிற் தவறாத பாண்டியமன்னன் அவசர முடிவால் விசாரணை ஏதுமின்றிக் கோவலனுக்கு மரணதண்டனை கொடுத்தான்.

கணவனின் மரணத்தைக் கேள்வியுற்ற கண்ணகி அரசனின் சபையில் புயலென நுழைந்தாள். மிகவும் கோபத்துடன் ஒரு காளிபோல அங்கே சென்றாள். தன் கணவர் குற்றமற்றவர் என்பதை நிறுவ தன் மற்றைய காற்சிலம்பை அரசர் முன் வீசி உடைத்தாள். அதிலிருந்து இரத்தினக் கற்கள் சிதறின. மாதேவியின் சிலம்போ முத்துக்களால் ஆனது. இதைக் கண்ட மன்னன் தன் தவற்றை உணர்ந்து உயிர் நீத்தான். பாண்டிமா தேவியும் அருகில் வீழ்ந்து உயிர் நீத்தாள்.

**வஞ்சிக்காண்டம்:**
ஆவேசம் கொண்ட கண்ணகி மதுரையை எரிப்பேன் என வஞ்சினம் கூறி. தன் கற்பின் திறனால் மதுரையை எரித்தாள். பின்னர் துயரமிகுதியால் கால்போன இடமெல்லாம் அலைந்தும் மயங்கி விழுந்தும் எழுந்தும் இறுதியாக ஒரு வேப்பமரத்தருகில் வந்து நின்றாள். அன்று கோவலன் இறந்த பதினான்காம் நாளாகும். கோவலன் வானுலகிலிருந்து தேவர்களுடன் வர, அவனுடன் கண்ணகியும் வானுலகு சென்றாள். இக்காட்சியைக் கண்ணுற்ற குறவர் குடியினர் சேர மன்னனாகிய சேரன் செங்குட்டுவனிடம் கூறினர். அரசன் கல் நட்டு வழிபட்டு, பின் இமயத்திலும் பத்தினிக்குக் கல் நாட்டிக்கொண்டான்.

சேரமன்னன் கண்ணகிக்கு விழா எடுக்கும்போது கஜபாகு மன்னன் கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக இலங்கைக்குக் கொண்டுவந்தான் என வரலாறு கூறுகின்றது. “கடல் சூழ் இலங்கைக் கஜபாகு” எனச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழ நாட்டிலே பிறந்து பாண்டி நாட்டிலே நீதிக்காகப் போராடி, சேர நாட்டிலே தெய்வமானாள் கண்ணகி. சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ்க் காவியமாகும்.

**“கண்ணகித் தாயவள் கடைக்கண் பார்வை போதுமே கடைத்தேற”**

# திருமுறைகளும் தேவாரமும்

## திருமதி அமிர்தநாயகி தியாகலிங்கம்

பன்னிரு திருமுறைகளுக்குள், ஏழு திருமுறைகளில் தேவாரங்கள் உள்ளடக்கப்பட்டதை நாம். அறிவோம். முதல் மூன்று திருமுறைகள் சம்பந்தப்பெருமான் அருளியவை. அடுத்து மூன்று திருமுறைகளில் அப்பர் சுவாமிகள் அருளியவை. ஏழாவது திருமுறை சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது. இந்த ஏழு திருமுறைகளையும் தேவாரம் என்று குறிப்பிடும் வழக்கம் வந்துவிட்டது. திருநாரையூர் பொல்லாப்பிள்ளையாரின் செல்லப்பிள்ளையும், பூரண அருள் பெற்றவருமான நம்பியாண்டார் நம்பிகள் அருள்மொழிவர்மன் என்னும் இராசராசசோழன் அரசு புரிந்தபோது சிதம்பரம் கோயிலில் பூட்டிப் பாதுகாக்கப்பட்டு வைத்திருந்த தேவாரங்களை முறைப்படுத்தி ஏழு திருமுறைகளை உருவாக்கினார். நம்பியாண்டார் நம்பி தேவாரங்களைக் கண்டபோது பல தேவாரங்கள் கறையான், பூச்சிகளால் அழிக்கப்பட்டதைப் பார்த்து அதிர்ந்து கவலையுற்றார். அப்போது இறைவனின் அசரீரி, "நம்பியே! உலகுக்குத் தேவையானவற்றைக் கொடுத்துள்ளேன். கவலை கொள்ளற்க!" என்று ஒலித்தது. எல்லாத் தேவாரங்களும் கிடைத்திருந்தால் ஏழு திரு முறைகளும் எழுபது திருமுறைகளாக உருவெடுத்திருக்கலாம். எல்லாம் அவன் செயல்.

### திருமுறைகள்:

முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் காலத்தில் நம்பியாண்டார் நம்பிகள் இருந்ததாக எண்ணப்படுவதால், இராசராசன் காலத்தில் முதல் ஏழு திருமுறைகளையும், இராசேந்திரன் காலத்தில் மற்ற நான்கு திருமுறைகளையும் வகுத்தனர் என்றும் சேக்கிழார் அருளிய பெரியபுராணம் பின்னாளில் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டதாகவும் சொல்கிறார்கள். சமயக் குரவர்கள் தவிர, திருமாளிகைத்தேவர், சேந்தனார், நம்பியாண்டார் நம்பி, பட்டினத்தடிகள், திருமூலர், காரைக்கால் அம்மையார், சேக்கிழார் ஆகியோருடன் பதின்னான்கு சைவ ஆசாரியார்கள் பாடியவை பன்னிரு திருமுறைகளில் அடங்கியிருக்கின்றன.

ஓம் என்கிற உயர்ந்த பிரவணத்துக்குள் திருமுறைகள் அடக்கம் எனக் கூறுவர். ஏனெனில் முதலாம் திருமுறையில் தொடங்கும் தோடுடைய செவியன் த்+ஓ =தோ என்று தொடங்கி, சேக்கிழார் பெருமான் பாடிய பெரிபுராணம் இறுதிச் செய்யுள் உலகெலாம் என "ம்" இல் முடிவதாலும் ஓம் என்பதனுள் திருமுறைகள் அடக்கம் என்கின்றனர். கோயில்களிலும் சைவசமய விழாக்களிலும் பாடப்படும் அருணகிரியாரின் திருப்புகழ் திருமுறைகளில் இல்லை.

### தேவாரங்கள்:

பாடல் பெற்ற தலங்கள் 276. முதல் தேவாரம் நாவுக்கரசர் பாடிய "கூற்றாயினவாறு" ஆகும். சம்பந்தர் பாடியவை திருக்கடைக்காப்பு என்றும் நாவுக்கரசரினது தேவாரம் என்றும் சுந்தர ருடையது திருப்பாட்டு என்றும் ஆதியில் அழைக்கப்பட்டது. திருஞானசம்பந்தர் கி.பி.638இல் அவதரித்தார். பதினாறு வயதில் ஆச்சாள்புரத்தில் தன் திருமணத்திற்கு வந்தவர்களையும் கூட்டி இறைவனுடன் கலந்தார். இவர் பாடிய பாடல்கள் 16000 என்று சொல்லப்பட்டாலும் கிடைத்தது என்னவோ ஏறக்குறைய 381 பதிகங்கள் 4158 பாடல்கள்தான். பதிகங்கள் பத்துப் பாடல்களாக இருந்தாலும் சம்பந்தர் பதினொராம் பாடலாக திருகடைக்காப்பு என்றொரு பாடலைச் சேர்த்து தாம் அருளிய பாடலகளைப் பாடினால் என்ன பலன் கிடைக்கும் என்றும் சொல்லியுள்ளார். சம்பந்தரின் பதிகங்களில் 8ஆம் 9ஆம் 10ஆம் தேவாரங்களில் முறையே இராவணன், திருமால்,

பிரமன், புத்த சமயம், சமண சமயம் குறித்துப் பாடியிருப்பார். சம்பந்தரின் மாலைமாற்றுப் பதிகம் முதலிலிருந்து முடிவு வரையிலும், முடிவிலிருந்து முதல் வரையிலும் எப்படி மாற்றிப் பார்த்தாலும் ஒரே தன்மையில் இருக்கும் பாடல்கள். புள்ளி வைத்த எழுத்துக்கள் இல்லாததும் இப்பாடலின் இன்னொரு சிறப்பு.

சம்பந்தரின் தந்தை தினமும் இவரின் பாடல்கள் எல்லாவற்றையும் பாடுவார். பாடல்கள் அதிகரித்துப்போக, சிரமப்பட்டு, எல்லாவற்றையும் பாட இயலவில்லை என்று சம்பந்தரிடம் கூறியபோது "திருவெழுக் கூற்றிருக்கை" என்ற பதிகத்தை அருளி, தந்தையிடம் இதை ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பேறு உண்டாகும் என்று சம்பந்தர் கூறினார். இந்தப் பதிகம் அனைத்து பேறுகளையும் ஒருங்கே அளிக்கும் அற்புத பதிகமாகும்.

பிள்ளைக் கறியமுது செய்து இறைவனுக்குப்படைத்த சிறுத்தொண்டர் நாயனார் குறித்துச் சம்பந்தப் பெருமான் "பைங்கோட்டு மலர்ப்புன்னை பறவைகாள்" என்று தொடங்கும் திருச்செங்காட்டங்குடிப் பதிகத்தில் பாடியுள்ளார். இவ்வாறு திருநீலநக்கநாயனாரிடமும் தோழமைபூண்டு அவரைத் திருசாத்தமங்கை அயவந்தி கோயில் தேவாரத்தில் அவர் பெயரைக் குறிப்பிட்டவர் ஆச்சாள்புரத்தில் தனது திருமணத்திற்கு புரோகிதராகச் செயல்படவும் வைத்தார்.

7ஆம் நூற்றாண்டில் அவதரித்த அப்பர் 82வயதில் திருப்புகலூர் மேவிய புண்ணியனைப் பணிந்து சித்திரை மாதச் சதயத்தில் சிவபதம் எய்தினார். இவர் பாடிய பாடல்கள் 49000 என்று சொல்லப்பட்டாலும் கிடைத்தது ஏறக்குறைய 312 பதிகங்கள், 3066 பாடல்கள். செந்தமிழ் கொண்டு தேவாரம் பாடியதால் திருநாவுக்கரசு என அழைக்கப்படுவீர் என்று அசரீரி ஒலித்தது. திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய 99 திருத்தாண்டங்களில் போற்றித்திருத்தாண்டகம், நின்ற திருத்தாண்டகம் பெரிய திருத்தாண்டகம் பல சிறப்புக்களை உடையவை.

"கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி" எனத் திருவாரூர் தியாகராயர் மீது பாடிய பதிகத்தில் 108 முறை போற்றி என்ற சொல் வருவதால் போற்றித்திருத்தாண்டகம் பதிகத்தை அர்ச்சனை செய்ய ஓதுவார்கள்.

வேதத்தின் சிறப்பு ஸ்ரீருத்ரம். சிவனின் பேராற்றலையும் விஸ்வரூபத்தையும் குறிப்பது, "இரு நிலனாய்த் தீயாகி, நீருமாகி" என்ற திருத்தாண்டகமாகும். அபிஷேக காலங்களில் இதை ஓதுவது சிறப்பு. குறிப்பாகப் பிரதோஷத்தில் உருத்திர ஜபம் ஓதித் திருமால் சிவனிடமிருந்து சுதர்சனம் பெற்றார். இதைப் பாராயணம் செய்தால் அபாயங்கள் அகலும். நல்லன நடக்கும். சேக்கிழாரால் பெரிய திருத்தாண்டகம் என்று குறிப்பிடப்பட்ட "அரியானை அந்தணர் தம் சிந்தையானை" பதிகத்தில் பல வருடங்கள் தான் சமண மதத்தில் இருந்ததற்கு வருத்தப்பட்டு, சிவபெருமானின் புகழைப் "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று முடிவதாக நாவுக்கரசர் பாடியுள்ளார்.

8ஆம் நூற்றாண்டில் அவதரித்த சுந்தரர் 18ஆம் அகவையில் இறைவன் அனுப்பிய வெள்ளை யானை மீதேறிக் கயிலை மலையை அடைந்தார். இவர் பாடிய பாடல்கள் 38000 என்று சொல்லப்பட்டாலும் கிடைத்தது என்னவோ ஏறக்குறைய 100 பதிகங்கள் 1026 பாடல்கள்தான். இறைவனுடன் கைலையில் இருந்த சுந்தரர் பூவுலகில் இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டார். சம்பந்தர், அப்பர் சுவாமிகள் போலல்லாது இல்லற வாழ்க்கையிலும் இறைவனை வணங்கி அருள் பெறலாம் எனக் காட்டினார். இறைவன் அடியெடுத்துக் கொடுக்க முதல் தேவாரம் பாடினார். சம்பந்தர் அவதரித்த சீகாழியில் கால் பதிக்க விருப்பற்று எல்லையில் நின்று "சாதலும் பிறத்தலும் தவிர்த்து" என்று பதிகம் பாடினார். கொடுத்த சத்தியத்தை மீறியதால் கண்களில்

பார்வையிழந்தவர் இறைவன்மீது பதிகங்கள் பாடி மீண்டும் பார்வை கிடைக்கப் பெற்றார். தேவாரத் திருமுறைகளின் முதற்பாடலாக சம்பந்தரின் "தோடுடைய செவியனும்" இறுதிப் பாடலாகச் சுந்தரரின் "ஊழிதொறு ஊழி முற்றும் உயர் பொன் நொடித்தான் மலையை" (கைலைமலையை) பாடலும் உள்ளன. மூவரும் இறையருள் நிறைந்த பல பாடல்களைப் பாடி அற்புதங்கள் புரிந்து இறைவனிடமிருந்து பலவற்றைப் பெற்றாலும், மூவரும் இறந்தவர்கள் உயிர் பெறவும் பாடியுள்ளார்கள்.

அகத்தியர் பொதிகை மலையில் சிவாலய முனிவருக்கு திருமுறைகளிலுள்ள பாடல்கள் அனைத்தையும் பாடிய அதே பலன் பெறும்வகையில் இருபத்தைந்து பதிகங்கள் கொண்ட அகத்தியர் தோத்திரத்திரட்டைத் தொகுத்தருளினார். இதில் சம்பந்தரின் 10 பதிகங்கள், நாவுக் கரசரின் 8 பதிககங்கள், சுந்தரரின் 7 பதிகங்கள் உள்ளன.

"திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினோடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே"

"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே"

திருக்கோயில் இல்லாத ஊரைக் காடென்றும், திருநாமம் சொல்லாதோர் செத்து மீண்டும் மீண்டு பிறந்தும் சாகின்றாரே என்றும் அப்பர் பெருமானின் தேவாரத்தால் அறியக் கிடக்கின்றது.

வேதங்களின் தலைவனும் அதை எமக்களித்தவனுமாகிய சிவபெருமானைப் பாடுங்கள். தேவாரங்களை இசையுங்கள், வீடுபேற்றைப் பெற்றிடுங்கள் என்கிறார் சம்பந்தர். இதையே நாவுக்கரசரும் "எண்ணுகேன் என்சொல்லி" என்ற பதிகத்திலும், "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேனே" என்ற பதிகத்திலும் சொல்லித் தொழுகின்றார்.

வெறுமையாக இருக்கும் வாழ்க்கையில், பொறுமையாகத் தேவாரங்களைப் பக்தியுடன் பாடி அருமையான வாழ்வைப் பெறலாம். உயிர் உடல் உள்ளம் என்பவற்றுக்கு மாயமருந்தாகும் தேவாரங்களைப் பாடுவோம்; பணிவோம்; பலன் பெறுவோம்.



# Thirukural Stories
# திருக்குறட் கதைகள்

- சாவித்திரி ஆனந்தன்

## அன்புடைமை
## Kindness of Love

அதிகாரம்: **08** குறள்: **74**
**Chapter: 08** **Verse: 74**

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு**

அன்பு, பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அது எல்லோரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.
Love generates aspirations for kind acts; that in turn springs up natural friendship.

இராமன் தனது இளம் பராயத்தில், தனது சகோதரர்களுடன் வசிட்டரின் ஆசிரமத்தில் குரு குலவாசம் செய்து வந்தான். அங்கே, இராமனுக்கு அனந்தன் என்னும் ஓர் உற்ற நண்பன் இருந்தான். அனந்தன் பரம ஏழை, ஆசிரமத்தில் குரு சேவை செய்து கொண்டிருந்தான். இராம இலட்சுமண சகோதரர்களுக்குச் சேவை செய்வதில் அனந்தன் பெருமகிழ்ச்சி கொண்டான். இராமன் மீது அவன் கொண்டிருந்த பாசம் தனித்துவமானது. அதே போலவே இராமனும் அனந்தன் மீது அளவற்ற அன்பு செலுத்தினான். இராமனுக்கு ஏடுகளை எடுத்துக் கொடுப்பது, எழுத்தாணியைக் கூராக்குவது, அம்பு வில்லைத் துப்புரவு செய்வது போன்ற பணிகளை அனந்தன் பெருவிருப்புடன் செய்து வந்தான். இராமனை ஒரு நாள் காணாவிட்டால் கூட அனந்தன் ஏங்கித் தவிப்பான்.

ஒவ்வொரு மாதமும் வனம் சென்று, சில நாள்கள் தங்கியிருந்து, பூஜைக்கு வேண்டிய தர்ப்பைப் புல்லைப் பறித்து வருதல் அனந்தனுடைய பணிகளில் ஒன்று. ஒரு தடவை இப்படி அவன் வனம் சென்றிருந்த போது, இராமனுடைய குருகுலவாசம் நிறைவுற்றதால், இராமனும் சகோதரர்களும் அயோத்திக்குத் திரும்பிவிட்டனர். ஆசிரமம் திரும்பிய அனந்தன் இதையறிந்து மிகவும் கலங்கினான், இராமனைப் பார்க்கவென அயோத்திக்குப் போனான். அங்கே இராமன் இல்லை. விஸ்வாமித்திரருடன் இராம-இலட்சுமணர் யாக சம்ரக்ஷணம் செய்யும் பொருட்டு வனம் சென்றுவிட்டதை அறிந்தான். காட்டில் இராமனுக்குரிய பணிவிடைகளை யார் செய்வார்கள் என்றெண்ணிக் கலங்கி, வசிட்டரிடம் கூடச் சொல்லாமல் காடு நோக்கிப் புறப்பட்டான்.

“ராமா! ராமா!...” என்று கூவிக் கொண்டு காடு முழுவதும் அலைந்தும் இராமனைக் காண முடியவில்லை. அது காட்டின் இருண்ட பகுதி. இராமனைக் காணாமல் ஆசிரமத்துக்குத் திரும்ப மாட்டேன் என்று பிடிவாதமாய் எண்ணியபடி, அந்த அடர்ந்த காட்டில் “ராமா! ராமா!...” என்று உச்சரித்தபடியே நிட்டையில் அமர்ந்தான். அவனை மூடிக்கொண்டு மண் புற்று வளர்ந்தது. இராம ஜெபம் மட்டும் நிற்கவில்லை.

காலம் வேகமாகச் சுழன்றபோது, இராமாயணச் சம்பவங்கள் அனைத்தும் நிகழ்ந்து முடிந்தன. இராமர் பட்டாபிஷேகத்துக்கு ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. எதையுமே அறியாமல் அனந்தன் புற்றுக்குள் இராம நாமத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தான். பட்டாபிஷேகத்துக்காக எல்லா ஊர்களிலிருந்தும் மக்கள் அயோத்தி நகரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். இராம நாமம் சொல்லியபடியே சில மகரிஷிகள் காட்டு வழியே நடந்த போது அவர்களில் ஒருவருடைய கால் பட்டு அனந்தனுடைய புற்று இடிந்தது. அவன் தவம் கலைந்து எழுந்தான். "ராமா! ராமா! எங்கே இருக்கிறாய் என் ராமா?" என்று கதறியழுதான். காலம் தனது வயதை அதிகமாக்கி விட்டதையோ, ஆண்டுகள் பல கழிந்து போனதையோ அவன் உணரவில்லை. குழந்தை போல அழுது இராமனைத் தேடினான்.

மகரிஷி ஒருவர் இவனிடம் கேட்டு சகல விவரமும் தெரிந்து கொண்டு பட்டாபிஷேகம் வரை நிகழ்ச்சிகள் நடந்து விட்டதைக் கூறினார். அனந்தன் பட்டாபிஷேகம் காண அயோத்திக்குப் புறப்பட்டான். கொலு மண்டபம் நோக்கிக் கம்பீரமாக நடந்து வந்துகொண்டிருந்தான் சிறீராமன். "அடே இராமா! இத்தனை காலம் எங்கிருந்தாயடா?.....உன்னை எத்தனை காலமாய்த் தேடுகி றேனடா!" என்று குரல் கொடுத்தபடி ஓடி வந்த அனந்தன் இராமனை இறுகத் தழுவிக் கொண்டான்.

பரதேசிக் கோலம் கொண்ட பாமரன் ஒருவன் இப்படி நடக்கிறானே என்று காவலர் அவனைப் பிடித்திழுக்க விரைந்தபோது, சிறீராமன் அனந்தனை நெஞ்சாரத் தழுவி, அவன் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி, "என்னை மன்னித்து விடு அனந்தா", உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வந்துவிட்டேன். என் பிரிவால் நீ எத்தனை துயரம் அடைந்திருப்பாய் என்பதை நானறிவேன்" என்று உணர்ச்சி மேலிடக் கூறினான். அனைவரும் திடுக்கிட்டனர்.

"இவர் யார்?" என்று வசிஷ்டர் இராமனிடம் கேட்க, "தெரியவில்லையா குருதேவா? இவன்தான் நம் குருகுலத்தில் சேவை செய்த அனந்தன். என்னை "அடே இராமா!" என்றழைக்க என் தந்தை இல்லையே என்று வருந்தினேன். அந்தக் குறையை இவன் தீர்த்து என் தந்தைக்கு நிகராக ஆகிவிட்டான்" என்று இராமன் கூறினான். வசிட்டர் அனந்தனைக் கட்டித் தழுவி ஆசீர்வதித்தார். தந்தைக்கு நிகரானவனாய் நினைத்த அனந்தனைத் தான் சிம்மானத்தில் அமர்வதற்கு முன் அந்தச் சிம்மானத்தில் அமரவைத்து இராமன் பெருமை கொண்டான். அனைவரும் அதை ஆமோதித்தனர்.

Sri Rama, in his childhood, with his brothers followed a "Gurukula Vasam" for learning at Guru Vashishtar's Ashram. There, Rama had a close friend named Ananthan. Ananthan was very poor and served the Guru in the Ashram. He was extremely happy to serve Rama and his brothers. The adoration and the devotion he had towards Rama was exclusive. If he couldn't see Rama even for a day, Ananthan would feel anxious to see Rama.

Every month, for some days, Ananthan would be away from the Ashram to the jungle to collect a special type of grass called "Tharpai" that is used in the Pooja. During one such period, Rama and brothers finished their gurukulam learning, left the ashram and went back to Ayoththi.

Ananthan, on his return from the jungle, got to know this and was very unhappy because he did not see Rama before Rama left. Ananthan then went to Ayoththi to meet Rama and heard that Rama and Laxman had gone to the jungle with the Sage Vishwamitra, to provide protection for the Sage while the Sage carry out a "Yaga". He was highly worried thinking

"Who will help Rama there in the jungle" and decided to go to the jungle himself in search of Rama. Without even informing about his decision to Vashishtar, he left the ashram and headed towards the jungle.

Calling "Rama!...Rama!..." ,Ananthan went through the dense forest and reached a dark zone of the jungle where he couldn't find Rama. "Without seeing Rama, I won't return to the ashram from this place" he sweared to himself and stayed in the jungle. He kept on chanting "Rama!...Rama!... Rama!..." and sat in a place and observed loyalty. Days passed by and sand grew all around him and covered Ananthan completely while the chanting of Rama's name never stopped. He was so entrenched, he failed to realise his surrounding.

Several years passed. All events of Ramayana took place and finally Ayoththi was getting ready to have Rama's Coronation. People from all over the world gathered in Ayoththi to take part in the Coronation Ceremony.

Some Sages, chanting Rama's name, passed through the jungle. When one Sage's foot touched Ananthan's sand covering, it broke. Ananthan suddenly came round and he began to cry painfully, "Rama..! Rama..! where are you my beloved Rama?" He never realised that years had passed by and he had become old now. One Sage told him about everything and the coronation that was about to take place.

Shri Rama was walking majestically towards the palace, getting ready for his coronation. Ananthan went to Ayoththi and seeing Rama walking towards the Coronation stage, shouted "Hey Rama! where were you all these years? Do you know for how long I am searching for you?"

The guards of the palace got alarmed to see a beggar like person calling their prince by his name and running towards Rama. They tried to pull him away from the place, when Rama intervened and hugged Ananthan with great affection, wiping away Ananthan's tears.

Rama spoke emotionally. "Please forgive me Ananthan! I left Gurukulam without letting you know. I can understand the pain you must have experienced without me" said Rama. All the people who were there were surprised. "Who is this?" Vashishtar asked Rama. "Don't you recognise him Gurutheva? He is Ananthan who served in our Gurukulam. I was really worried that my father was not with me. Now to call me as "Hey Rama!" Ananthan fulfilled that wish of mine and he is now my father."

Vashishtar hugged and blessed Ananthan. Rama, considering Ananthan as his father, sat Ananthan on the throne first, before he himself sat on it. Everyone acknowledged this gesture.

நீங்கள் செய்யும் செயல் சரியெனில்.....
கோபப்பட அவசியமில்லை
செய்யும் செயல் தவறெனில்.....
கோபப்படுவதில் அர்த்தமில்லை - மகாத்மா காந்தி

# எதிர்ப் பக்கத்தில்.....

சைவ முன்னேற்றச் சங்கத்தின் அருள்மிகு சிவகாமசுந்தரி உடனுறை சிதம்பரேசுவரர் ஆலயத்தின் குடமுழுக்கு இவ்வருடம் 10.02.19 இல் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து முதன்முதலாக, 29.06.19 கொடியேற்றத்துடன் ஆரம்பித்த மகோற்சவம் 07.07.19 ஞாயிறு அன்று தேர்த் திருவிழாவுடனும் 08.07.19இல் ஆனித் திருமஞ்சனத்துடனும் மிகச் சிறப்பாக நடந்தேறியது. கொடியேற்றம், தேர்த்திருவிழாப் படங்களை இங்கே காணலாம்.

சங்கத்தின் 42ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த 21.09.2019 சனிக்கிழமை இனிதே நடைபெற்றது. இவ்விழாவில், சிவஸ்ரீ கயிலை நாகநாதசிவம் சிவாசாரியார், (லண்டன் ஸ்ரீ முருகன் கோயில் பிரதம குருக்கள்) சிவஸ்ரீ ரமேஷ் சிவாசாரியார் (சைவ முன்னேற்றச் சங்கத்தின் நடராஜர் திருக்கோயில் பிரதம குருக்கள்) ஆகிய இருவரும் ஆசியுரை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மன்னாரில் பல தொண்டுகளைச் செய்துவரும் Dr ஜெயேந்திரன் நமசிவாயம் அவர்களைப் பாராட்டி, “சமூகச்செம்மல்” என்ற பட்டமளித்துச் சங்கம் கௌரவித்தது. இந்த விழாவில் Redbridge Council நகரபிதா திரு ஹுசேன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்கள்.

நால்வர் தமிழ்க்கலை நிலையத்தின் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. வீணை, நடனம் ஆகிய நிகழ்ச்சிகளின் படங்களை இங்கே காணலாம்.



## சைவமுன்னேற்றச் சங்கம் ஸ்ரீ நடராஜர் கோவில் முதலாவது மகோற்சவம் - 2019









## சைவமுன்னேற்றச் சங்கத்தின் 42ஆவது ஆண்டு நிறைவு விழா - 2019












Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford, Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.



Quality! Variety!! Satisfaction!!!
Veena's
CASH & CARRY
FRESH FRUITS & VEGETABLES
FROZEN FOODS
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com



சிவயோகம்
SIVAYOGAM

# இந்துக் கலாசார மையம்

128, Aurelia Road, Croydon CRO 3BF
Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333
Email: sivashakthy@sivayogam.co.uk






**குறைடனில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் மூலஸ்தானம்**

அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனை ப் பிரார்த்திக்கின்றோ ம். அம்பாளின் அருளாலும், அடியவர்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்குத் திருக்கோயில் அமைக்கும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் திருப்பணியை விரைவாக நிறைவேற்றுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம். வங்கிக் கணக்கு விபரம்

Name :- SIVAYOGAM BUILDING FUND

Account No. :- 20057541

Sort Code :- 20 21 78

Bank :- BARCLAYS BANK

நன்றி

அறங்காவலர் சபையினர்


Lycamobile
4G LTE
Out of this world data...
20GB
Unlimited UK minutes
Unlimited UK texts
Just £10*
for the first month
£20/30 days thereafter
...with UK Plan Mega
lycamobile.co.uk
0207 132 0322
*New customers only.
When purchased online

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Orchid Bungalow
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

Jasmine Bungalow
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592


Trinity Community Centre
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139



"Ammanai Saran Addinthal Athika Varam Peralam"
SRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
Founded on 10.08.1991 Charity No. 1014409
5 Chapel Road London W13 9AE,
Tel: 020 8810 0835/ 020 8840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org

# தியான மண்டபம்



## அம்பிகைக்கு ஓர் மண்டபம் அமைத்திடுவோம் வாரீர் !

**6000 சதுர அடியில் மூன்று தளங்களைக் கொண்டு அமையும் தியான மண்டபம் ஒவ்வொருவரும் இணைந்திட ஒரு சதுர அடிக்கு £180 பவுண்களே. அம்பிகையின் அருட்கடாட்சத்திற்கு ஆளாகுங்கள்.**

கடந்த 14.07.2018 அன்று அழகுற அமையப் போகும் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற துர்கை அடியார்கள் அனைவரும் தங்களால் முடிந்த நன்கொடையை வழங்கி உதவுங்கள்!

சிறுதுளி பெரு வெள்ளம்

Please Extend your support to build our Meditation Hall
your Magnanimity will enable us to build
the Three Story 6000 Squate Feet Meditation Hall.
Sponsorship of £180 for a Square feet.

Bank Details: SKTA Temple Trust
LLOYDS Bank, Sort Code: 30-98-91| Account No: 02717646

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்!**

*Please Donate as much as you can!*

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

ஒக்டோபர் (18-10-2019) தொடக்கம் ஜனவரி (15-01-2020) வரை

| | | |
|---|---|---|
| 27.10.2019 | ஞாயிறு | கேதாரகௌரி விரதப் பூர்த்தி |
| 27.10.2019 | ஞாயிறு | தீபாவளி |
| 28.10.2019 | திங்கள் | கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 02.11.2019 | சனி | கந்தசஷ்டி விரதம் பூர்த்தி |
| 20.11.2019 | புதன் | ஆறுமுக நாவலர் குருபூசை |
| 10.12.2019 | வியாழன் | திருக்கார்த்திகை விரதம் |
| 12.12.2019 | வியாழன் | விநாயகர் விரத ஆரம்பம் |
| 31.12.2019 | செவ்வாய் | விநாயகர் விரதம் பூர்த்தி |
| 01.01.2020 | புதன் | திருவெம்பாவை ஆரம்பம் |
| 10.01.2020 | வெள்ளி | நடேசர் அபிஷேகம் (காலை) |
| 15.01.2020 | புதன் | தைப்பொங்கல் |

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

அன்பர்கள் அனைவரும் வந்து, ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத், திருவருள் பெற்று உய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

**Saiva Munnetta Sangam (UK)**

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel : 020 8514 4732 Fax: 01268 561805

**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

# MEMBERSHIP FORM

| | | | | |
|---|---|---|---|---|
| Title | | Home Phone | | |
| First Name | | Mobile No | | |
| Surname | | Email ID | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | |
| Post code | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# சங்ககால ஊர்திகள்

## -திருமதி தனலட்சுமி குலசேகரம்

மனித நாகரிகமும் பண்பாடும் ஆற்றங்கரை களில் தோன்றி வளர்ந்தது என்பது வரலாறு. ஆதி மனிதன் உணவைத்தேடி இடம் விட்டிடம் நகர வேண்டியிருந்தது. மக்கள் நடந்தும் தலையில் சுமந்தும் இடுப்பில் கட்டி இழுத்தும் பொருள்களைக் கொண்டு சென்றனர். பின்பு தமது கட்டுப்பாட்டிலிருந்த விலங்குகளைப் போக்குவரத்திற்கும் வணிகத்திற்கும் பயன்படுத்தினர்.

நாளுக்கு நாள் பரிணாம வளர்ச்சி கண்ட மனிதன் அறிவு விருத்தியாகிப் புதிய கருவி களைக் கண்டு பிடித்தான். முன்னேறப் பயன ளிக்கும் தேவையை நிவர்த்தி செய்தான். பின்பு ஒவ்வொரு துறையிலும் ஆழம் பதிக்கத் தொடங்கினான்.

இடம்விட்டிடம் நகரத் தொடங்கிய மனிதன் ஊரையும் உறவுகளையும் கண்டான். உற்பத்திகளை இடத்திற்கிடம் மாற்றி வாணிபம் செய்தான். ஆதியில் அவன் பயன்படுத்திய ஊர்திகள் சுற்றுச்சூழலோடு ஒத்திசைந்திருந்தன. அவைகள் இயற்கைச் சூழலுக்கு எந்தவித இடையூறுமின்ற மிக நுட்பமான தன்மையுடையதாய் இருந்ததால் சுற்றுச்சூழல் மாசடையவில்லை.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய தமிழ்க் குடிமக்கள் தரைவழிப் பயன்பாட்டிற்கும் ஊர்தியையும் கடல்வழிப் பயணத்திற்கு கலத்தையும் பயன்படுத்திய விதம் மிகச்சிறப்புடையது. போக்கு வரத்துப் பயன்பாட்டில் விரைவான போக்குவரத்து ஊர்திகள் இன்று உள்ளதுபோல அன்று இல்லை.

குதிரை, அத்திரி(கோவேறுகழுதை), எருது போன்றவை தரை வழிப் போக்குவரத்திற்கும் வாணிபத்திற்கும் பயன்படுத்தப்பட்டன. பொதி சுமக்கும் வண்டியை இழுக்கவும் எருதுகள் உபயோகப்பட்டன. குதிரைகள் சிந்து, பாரசீகம், அரேபியா போன்ற நாடுகளில் இருந்து கலன்கள் மூலம் இங்கு கொண்டுவரப்பட்டன. குதிரைகள் போர்க்காலத்தில் போரில் உதவின. போக்குவரத்திற்கு குதிரைகளை அரசர்களும் செல்வந்தர்களும் பயன் படுத்தினார்கள். குதிரை வண்டிகள் தேர் என அழைக்கப்பட்டன. சங்க நூல்களில் குதிரை பூட்டிய தேர்கள் பற்றிய பதிவுகள் நிரம்பக் காணப்படுகின்றன.

"வீங்கு சுவல் மொசியத் தாங்குநுகம் தழீஇ
பூம்பொறிப்பல் படை ஒப்பப்பூட்டி
மதியுடை வலவன் ஏவன், இருதுறைப்
புனல் பாய்ந் தன்ன வாய் மான் திண்தேர்"

(அகம் 400-11-14)

பல வடங்கள் ஒலிக்கும்படி நுகத்தடியில் பூட்டி பாகன் செலுத்த, குதிரைகள் அம்பு போன்று தாவிச் சென்றன என்ற பதிவு குதிரைப் பயன்பாட்டை உணர்த்துவதுடன் அது விரைந்து செல்லும் தன்மையுடையது என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

"வண்பரி நெடுந்தேர் பூண்க"

(புறம் 146-11-14)

என்ற அடிகள் நின் குதிரைகள் பூண்க! என்று விளிப்பதன் மூலம் குதிரைகள் தேரை இழுக்கப் பயன்பட்டதையும் அத்தேரில் அரசர்கள் ஊர்ந்து சென்றதையும் விளக்குகின்றது.

"நூல்நெறி நுணங்கிய கால்நவில் புரவி"

(அகம் 314-8)

புரவி நூல் கூறும் இலக்கண முறைப்படி, நுட்பமாக அமைந்து காற்றெனக் கடுகிச் செல்லும் குதிரை என்று வரும் இத் தொடர்கள் மிக வேகமாகச் செல்லும் குதிரைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது

கோவேறு கழுதைகளுக்கு அத்திரி என்று பெயர். இவை வெளிநாடுகளிலிருந்து

கொண்டுவரப்பட்டன. அன்று சமூகத்தில் செல்வ நம்பிகளாக இருந்தவர்கள் இவற்றை ஊர்த களாகப் பயன்படுத்தினர். அத்திரிக்கு இராசஊர்தி என்ற பெயர் வழங்கப்பட்டது. கடற்கழி வழியாக அத்திரி ஊர்தி ஊர்ந்து வரும் வழக்கம் இருந்தது. என்ற செய்தியை

"கழிச்சேறு ஆடிய கணக்கால் அத்திரி
குழம்பிலும் சேயிறா ஒடுங்கின
கோதை எல்லாம்
ஊதை வெண்மணலே" என்கிறது.

-(நற்றிணை 278-7-9)

பொருள்:- தலைவன் கடற்கரைக்குக் கோவேறு கழுதை பூட்டிய தேரிலே ஏறி வந்தான். அத்தேரின் சக்கரங்களில் கடற்கரையில் சேறுபட்டுவிட்டது. தேரை இழுக்கும் கோவேறு கழுதைகளின் குழம்புகளில் சிவந்த இறால்மீன்கள் சிக்கி அழிந்தன என்கிறது.

பாண்டிய நாட்டிலுள்ள கொற்கை கடலுக்கு அருகில் உள்ள பரதவர் குடியிருப்புக்கு ஒருவன் அத்திரியில் ஊர்ந்து சென்றதை,

"கொடுநுக் நுழைந்த கணைக்கால் அத்திரியில்
வழமணி நெடுந்தேர் பூண"

என்ற அகப்பாடல் கூறுகிறது. மதுரையம் பதியில் வைகை ஆற்றில் நடந்த நீராட்டு விழாவிற்கு சிலர் அத்திரியில் ஊர்ந்து வந்தனர் என்பதை பரிபாடலின்வழி அறியமுடிகிறது.

"அகவரும் பாண்டியும் அத்திரியும் ஆய்மாச்
சகடமும் தண்டுஆர சிவிகையும் பண்ணி
வகை வகை ஊழ் ஊழ் கதழ் மூழ்ந்து"

(பரிபாடல் 10-16-17)

அத்திரி, காளை பூட்டிய வண்டி, அழகிய பல்லக்கு இவற்றை எல்லாம் அழகுபடுத்தி கூடிநின்று அவரவர்க்கு உரியவற்றின் மேல் ஏறினர் என்கிறது இவ்வடிகள். அத்திரியுடன் காளை பூட்டிய வண்டியும் அழகிய பல்லக்கும் பயன்பட்டு இருந்ததை இதனால் அறிய முடிகிறது.

சிலம்பில் கடலாடு காதையில் கோவலன் கடலாடுவதற்கு கடற்கரைக்குச் சென்றபோது அவன் அத்திரி ஊர்தியில் ஊர்ந்து சென்றான்.

"வான வண்கையன் அத்திரி ஏற"

(சில. கடலாடுகாதை)

கடலாடுவதற்காக வான் மழை போன்று வழங்கி மகிழும் கோவலன் அத்திரியில் ஊர்ந்தி சென்றான் என்று கூறுகிறது.

"தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டின் உப்பின் கொள்ளை சாற்றி
நெடுநெறி ஒழுகை நிலவு மணல் நீந்தி
அவன்: உறை முனித ஒக்கலோடு
புலம்பெயர்ந்து உமணர் போகலும்"

(நற்றிணை 183-1-5)

பண்டமாற்று வணிகம் இவ்வண்டிகள் மூலம் செய்தார்கள் என்பதை இங்கே காட்டப்படுகிறது. கழுதைகளை உபயோகித்து ஊர் ஊராக வணிகப் பொருள்களைக் கொண்டு சென்றார்கள். கழுதைகளின் முதுகின்மேல் சரக்குகளை ஏற்றிக்கொண்டு கூட்டம் கூட்டமாகச் செல்வர். இப்படிக் கூட்டமாகச் செல்லும் வணிகர் கூட்டம் வணிகசாத்து எனப்பட்டது. வழிப்பறி கொள்ளையர்களுக்கு பயந்து வில், வாள் ஏந்திய வீரர்களைத் துணைக்கு அழைத்துச் செல்வர். இதை இப்பதிவு காட்டுகிறது.

"களர் பரந்த கல்னெடு மருங்கின்
விளரூன் தின்ற வீங்கு சிலை மறவர்
மைபடு திண்டோள் மர ஆட்டிப்
பொறை மலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவாள் வயவர் அருந்தலை துமித்த
படுபலாக் அமிழும் ஞாட்டு"

(அகம் 89-9-14)

மிளகு மூட்டைகள் பலாப்பழம் அளவுடையதாய்க் கட்டப்பட்டு, அம்மூட்டைகளை கழுதைகளின் முதுகின்மேல் ஏற்றிக் கொண்டு வணிகச்சாத்துகள் தங்களது வில்வீரர்களோடு சென்றனர். இதனை பெரும்பாணாற்றுப்படை,

"சிறுசுளை பெரும்பழம் கடும்ப மிரியல்
புணர்ப் பொறை தாங்கிய வடுவாழ் நோன்புற்று
அணர்ச் செவிக்கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல் குடைப்பெரு வழிக்கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன் காட்டியளவு"

(பெரும்பாணாற்றுப்படை-73-82)

**கடல் வாணிபத்தில் கலன்**

கடலில் கலம் செலுத்தி வாணிபம் செய்தனர் நம் முன்னோர்கள். மரக் கலன்களின் மூலம் உள்நாட்டுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு போய் வெளிநாடுகளிலிருந்து பொருள்களை

ஏற்றிக் கொண்டு வந்தனர். தீவுக்குள் சென்று வாணிபம் செய்து திரும்பியதை இவ்வடிகள் விளக்குகின்றன. கடுமையான காற்றினால் தாக்குதலுற்று திண்மையான கயிறுகளையும் பாய்மரத்தையும் ஒடித்து, நாவாயை அடித்துச் சென்று பாறைக்கல்லில் மோதி நீர்ச்சுழியில் சிக்கிக்கொண்ட நாவாய் பற்றிய பதிவு மதுரைக் களஞ்சியத்தில் இடம்பெற்றுள்ளது.

"பன்மின் வழங்கும் வளைமேற் பரப்பின்
விலங்குபிணி நோன்கயிறு அறிஇதை புடையக்
கூம்புமுதல் முருங்கா ஏற்றிச் சாய்ந்துடன்
கடுங்காற்று எடுப்பக் கல்பொருது இரைஇ
நெடுஞ்சுழிப்பட்ட நாவாய்"

(மதுரைக் காஞ்சி 375-3)

கலன்கள் துறைமுகத்தை அடைந்தபோது அதை மக்கள் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டு அழைத்தனர்.

"தாம் வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேரும்
ஏமுறு நாவாய் வர எதிர் கொள்வார் போல்"

(பரிபாடல் 10-38-39)

என்று பரிபாடல் அடிகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தின் அழகிய நதியான காவிரியின் முகத்துவாரம் ஆழமாகவும் அகலமாகவும் பல கலன்கள் தங்குவதற்கு ஏற்றதாகவும் இருந்தது. வாணிபக் கலன்கள் பாயைச் சுருட்டாமலும் பாரத்தைக் கழிக்காமலும் நேரே ஆற்றினுள் புகுந்து துறைமுகத்தை அடைந்துள்ளன.

"கூம்பொடு மீப்பாய் களையாது மிசைப்பரந்த
தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச்சொரியுஞ்
கடற் பலதார்த்த நாடு கிழவோயே"

(புறம் 30-11-15)

கலன் மிகநுட்பத்துடன் கரையை அடைந்ததைக் காணக்கூடியதாய் இருந்தது.

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் வந்தது இறங்கிய பொருள்களைப் பட்டியல் போடு கிறார் கடியலூர் உருத்திராங்கண்ணனார்.

"நீரின் வந்தநிமிர்பரிப் புரவியும்
கான் வந்த கருங்கறிமூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரம் அகிலும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெறிய ஈண்டி
வளந்தலை மயங்கி நனந்தில மறுகு"

(பட்டினப்பாலை 185-193)

அன்றைய மனிதன் பலவல்லமை பெற்ற பல்வேறு உத்திகளுடன் இயற்கையைப் பாதிக்காது வாழ்ந்துள்ளான்.

## மகாபலிச் சக்கரவர்த்தியின் முற்பிறவி

முன்னொருகாலத்தில் பசியுடன் இருந்த எலியொன்று திருமறைக்காடு கோயிலுள் தீபத்தில் இருந்த நெய்யை உண்ண முயன்றது. அச்சமயம் அணையவிருந்த விளக்கு எலியின் மூக்கால் தூண்டப்பட, பிரகாசமாக எரிந்தது. சிவன்கோயில் விளக்கை எரியவைத்த காரணத்தால் அடுத்த பிறவியில் எலி மகாபலிச்சக்கரவர்த்தியாகப் பிறந்தது. இந்த விவரத்தை அப்பர் தேவாரத்தில் காணலாம்:

நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவான் உலகமெல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும் குறுக்கைவீ ரட்டனாரே

தி 4 பதி 49 பா 8

# குறள் காட்டும் இறைவழி

-அநுஜா-

தொன்றுதொட்டு இன்றுவரை எந்தவொரு நல்ல காரியத்தையும் தொடங்கும்போது இறைவனை வணங்கித் தொழுது ஆரம்பிப்பது தமிழர் பண்பாடு. (தமிழர்களில் இந்துக்கள் அல்லாத கிறித்துவர்கள், இசுலாமியர்கூட இதைப் பின்பற்றுவதைக் காண முடிகிறது.) திருவள்ளவரும் இதற்கு விதிவிலக்கல்லர். தமிழ் மறை என்று போற்றப்படும் திருக்குறளைக் கடவுள் வாழ்த்து டனேயே ஆரம்பித்துள்ளார். ஏனைய பல அதிகாரங்களிலும் இறைவழியில் எம்மை இட்டுச்செல்லும் பல குறள்களை ஆங்காங்கே காணமுடிகிறது. அவற்றுட் சிலவற்றை இங்கே பார்க்கலாம்.

முதலாவது அதிகாரமான கடவுள் வாழ்த்தில் கடவுளைப்பற்றிய முழுவிளக்கமும் அடங்கி விடுகிறது. முதலாவது குறளில், எழுத்துக்கள் எல்லாவற்றுக்கும் முதலாவதாக விளங்குவது "அ" கரமாகும். அதேபோல உலகின் தோற்றத்துக்கும் இயக்கத்துக்கும் அடிப்படையாக இருப்பவர், முதன்மையானவர் இறைவனாகும் என்கிறார் வள்ளுவர். தொடர்ந்து வரும் குறள்களில் கடவுளின் தன்மையையும் அவரை வணங்குவதால் ஏற்படும் பயன்களையும் விளக்குகிறார். அந்த அதிகாரத்தின் இறுதிக் குறளில் இறைவனின் பாதகமலங்களைச் சரணடைந்தவர்கள்தான் பிறவித் துன்பத்திலிருந்து விடுபடமுடியும், இறைவனை வணங்காதவர்கள் மீண்டும் மீண்டும் இவ்வுலகத்தில் பிறந்து துன்புற நேரிடும் எனக்கூறி எம்மை இறைவழிப்படுத்துகிறார்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் எம்மைப் பிணித்திருப்பதால் (ஆன்மாவுடனேயே இருப்பதால்) இறையொளி எம் கண்ணுக்குத் தெரிவதில்லை. நான், எனது என்பவை ஆணவத்தின் அறிகுறிகள். ஐம்புலன்கள் எம்மை மயங்கவைக்கின்றன. இதனால் எம்மை இரு வினைகளையும் (நல்வினை, தீவினை) செய்ய வைக்கின்றன. ஆணவத்தினால் அகங்காரமும், கோபமும் வருகின்றன. அவை நம்மைப் பாதிக்கின்றன. இந்தக் குணங்கள் குடும்பம் என்ற சாதாரண நிலையிலிருப்பவரிலிருந்து அரசியல் அதிகாரம் போன்ற மேல் நிலையில் உள்ளவர்வரை அனைவரையும் பாதிக்கின்றன. இதனால் பல அழிவுகள் ஏற்படுகின்றன. வெகுளாமை என்ற அதிகாரத்தில் கோபத்தினால் வரும் அழிவுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு குறளைப் பார்க்கலாம்.

தன்னைத்தான் காக்கச் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் *305*

ஒருவன் தனது உடலையும் மனத்தையும் பாதுகாக்க வேண்டுமெனில் கோபத்தைத் தவிர்க்கவேண்டும். கோபம் வரும்போது அறிவு மயங்கிவிடுகிறது. இன்பம் மறைகிறது. உடலில் இரத்த அழுத்தத்தையும் நரம்புத் தளர்சியையும் ஏற்படுத்துகிறது. ஒருவரின் கோபம் அவரைச் சுற்றியிருப்பவர்களையும் பாதிக்கிறது.

குற்றங்கடிதல் என்னும் அதிகாரத்தில் கோபத்தைத் தவிர்ப்பதற்கான வழிவகை கூறப்பட்டுள்ளது. பொதுவாக எம்மைச் சுற்றயிருப்பவர்கள் மீதே எமக்குக் கோபம் வருகிறது. கோபத்தைத் தவிர்க்க முதலில் எம்மை நாம் அறிந்துகொள்ளவேண்டும் (self realisation) பின்னர் குற்றங்களைத் தவிர்க்கவேண்டும். இதனால் தெளிவு கிடைக்கும். கோபம் எம்மை விட்டு விலகிச் செல்லும்.

அதனை விளக்கும் குறள் -

தன்குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு 436

அறநெறியில் வாழ்ந்தால் மட்டுமே இறைவனை அடைய இயலும் என்பது ஆன்றோர் வாக்கு. அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரம் அறவழியைக் காட்டுகிறது. அதில் ஒரு குறள்,

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம் 35

பொறாமை, பேராசை, சினம், கடுமையான சொல் ஆகிய நான்கையும் தவிர்த்து வாழ்வதே அறநெறியாகும். இந்த நான்கு குணங்களுந்தான் எம்மைத் துன்பத்து ஆளாக்குகின்றன. ஆசைகள் வரும்போது. அவை நிறைவேறாத தருணத்தில் அந்த ஆசைகளை அடைந்தவர்களைப் பார்க்கும்போது பொறாமை வருகின்றது. அதனால் கோபம் வருகின்றது. கோபம் வந்தவுடன் கடும் சொல்லும் கூடவே வரும். எனவே ஆசைக்கு வரம்பு கட்டினால் அறநெறியைப் பின்பற்றுதல் எளிதாகும். இதனையே சமயசாத்திரங்கள் வலியுறுத்துகின்றன. அவா அறுத்தல் என்ற அதிகாரத்தில் இதனை வள்ளுவரும் வலியுறுத்தியுள்ளார். அதில் ஒரு குறள் வருமாறு:

தூஉய்மை என்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும் 364

ஆசையற்ற தன்மையால் குற்றமற்ற தூய நிலை அடையமுடியும். தூய நிலை அடையும்போது அது மெய்ப்பொருளாகிய இறைவனை அடைய வழிவகுக்கும். இதனை மேலும் விளக்கும் ஒரு குறள் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் வரும் பத்தாவது குறளாகும்.

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் 360

விருப்பு, வெறுப்பு, அறியாமை, ஆகிய மூன்று விதமான குற்றங்களும் எம்மை விட்டு அகன்றால் பிறவித் துன்பம் இல்லாமற்போகும். பற்றற்றவனாகிய இறைவனைப் பற்றிக்கொள்வதே - பக்தி செலுத்துவதே, வழிபடுவதே ஒரே வழியாகும். இதனை விளக்கும் குறள் இதோ:

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு 350

இறைவன் கருணை வடிவானவன். 'அன்பே சிவம்' என்பார் திருமூலர். தன்னுயிர் போல மற்றைய உயிர்களையும் பேணுதல் இறைவனையே போற்றுதல்போலாகும். அருளுடைமை என்னும் அதிகாரம் இதனை விளக்குகின்றது. அதில் வரும் ஓர் அழகான குறளில் இலகுவாக எவரும் புரியுமாறு விளக்குகிறார் வள்ளுவர். அந்தக் குறள்:

அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு 247

இந்த உலக வாழ்க்கையை நன்கு அநுபவிக்கப் பொருட்செல்வம் அவசியமானது. பணமின்றி இந்த உலகில் மனிதர் எவரும் வசதிகளோடு வாழ இயலாது என்பது யாவரும் அறிந்த விடயம். அதேபோல எம்மைச் சுற்றியுள்ள மற்றைய மனிதர்கள் மீது அல்லது ஏனைய உயிர்கள் மீது அன்பு, இரக்கம் இல்லாது இருந்தால் மேலுலக வாழ்வை அநுபவிக்க இயலாது.

அன்புடைமை என்னும் அதிகாரம் எப்படிப் பிறரிடம் அன்புசெலுத்துவது என்பதைக் கூறுகிறது. அன்புடையவர்கள் என்றும் காலத்தால் அழியாது மக்களால் போற்றப்படும் சிறப்புடையவர்கள் என்பதை வரலாறு நிரூபிக்கின்றது. நாயன்மார், ஆழ்வார்கள் போன்ற மகான்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இதனை விளக்கும் குறள்,

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு *75*

பிற உயிர்களிடத்து அன்புடையவர்களாய் இருப்பதற்கு பிற உயிர்களைக் கொன்று உண்ணுதலைத் தவிர்க்க வேண்டும் என்பதைப் புலால் மறுத்தல் என்னும் அதிகாரம் எடுத்துரைக்கின்றது. அதிலிருந்து ஒரு குறள் வருமாறு:

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் *251*

தன் உடலை வளர்ப்பதற்கு இன்னொரு பிராணியைக் கொன்று அதன் உடலை உண்பவன் எப்படி அருளுடையவனாக இருக்கமுடியும் என்று ஒரு கேள்வியை எழுப்புகிறார் திருவள்ளுவர். ஒவ்வொருவரின் சிந்தனையையும் தூண்டும்வண்ணம் இருக்கிறது இக்குறள். அன்பின் மேலான நிலை அருளாகும். யார், எவர், எது என்றில்லாமல் எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருத்தல் அருளாகும்.

இன்னொரு அதிகாரத்தில், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதுடன் தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்வதே தவம் என்று விளக்குகிறார் வள்ளுவர். தவம் என்றால், முற்காலத்தில் முனிவர்கள் காடுகளுக்குச் சென்று அங்கே இருந்து தவம் செய்தமை போலத் தவம் செய்யவேண்டியதில்லை என்பதை விளக்குகிறது கீழே உள்ள குறள்:

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு *261*

மேற்கூறப்பட்டுள்ள அறவழியைப் பின்பற்றி இறைவனை அடைய நாம் நம்மைப் பயிற்றுவித்தல் வேண்டும்.

எந்த நூலைக் கற்றபோதும் (சமய நூல்கள், அற நூல்கள், இலக்கிய நூல்கள்) அந்த நூல்களிலே சொல்லப்பட்ட அறவழிகளைக் கடைப்பிடித்து அவற்றின் வழி ஒழுகல் வேண்டும். இல்லையேல் அந்த நூல்களைக் கற்றதால் எவ்வித பயனும் இல்லை. இதையே இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற மகான்களும் சொல்கிறார்கள். இதைத் திருவள்ளுவர்:

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக *391*

என்கிறார். கற்கவேண்டியதைக் கற்று நன்கு தெளிதல் வேண்டும். பின்பு அவற்றைக் கடைப்பிடித்து அந்த வழியிலே வாழவேண்டும்.

அண்மையில் யோகி சுதர்சனர் என்றொருவரின் சொற்பொழிவைக் கேட்க நேர்ந்தது. பகவத் கீதையில் வரும் சுலோகங்களுக்கு விளக்கம் கூறி, மகாபாரதத்தில் அதற்கான தொடர்பை விளக்கினார். மனிதர்களுக்குத் துன்பம் தரும் ஆசை, பொறாமை, கோபம், அகங்காரம் என்பவற்றின் வடிவம் துரியோதனன். புத்திர பாசத்தினால் மகனின் தவறுகளுக்குத் துணைபோகும் தந்தை திருதராட்டிரன். தருமத்தின் வடிவம் தருமர். தனிப்பட்ட மனிதர்களிடமே நல்ல குணமும் தீயகுணமும் கலந்திருப்பதை மகாபாரதம் விளக்குகிறது என்றார் அவர். குறட்கருத்துக்களின் பொருள்பட சைவசித்தாந்த, வேதாந்தக் கருத்துக்கள் இருப்பதை யோகியாரின் சொற்பொழிவில் அவதானிக்க முடிந்தது.

திருக்குறளாகிய செந்தமிழ்வேதப் பொக்கிஷத்தைக் கற்றுணர்ந்து கடைப்பிடித்து வாழ்வில் பயன்பெறுவோமாக.

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

# "அறிவோம் ஆன்மிகம்"

**"சித்தம் போக்கு சிவன் போக்கு" என்கிறார்களே!! இதற்கு என்ன பொருள்?**

சித்தம் என்றால் மனம். கீதையில் ஆத்ம ஸ்வரூபத்தைப்பற்றி பகவான் விளக்கும்போது"ரதகத்யேவ ஸாரதி" என்கிறார். அதாவது, எப்படி ரதத்தைத் தேரோட்டி ஓட்டிச் செல்கினறானோ, அதுபோல எல்லாம் வல்ல இறைவன் நம்மை எல்லாம் வழிநடத்திச் செல்கின்றார் என விளக்குகிறார்.

சைவ சித்தாந்தமும் நம் அனைவருக்குள்ளும் ஆடிக்கொண்டிருப்பது எல்லாம் வல்ல நடராஜமூர்த்திதான் என்று விளக்குகிறது. சிவம் நம்மில் இருந்து விலகினால், நாம் சவமாகி விடுகிறோம்.. அப்டியானால் நம் அனைவருக்குள்ளும் நிறைந்து நம்மை வழி நடத்தக்கூடிய அருட்சக்தியே சிவமாகும்.

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே!" என்றபடி, சிவபெருமான் எப்படி நம்மை ஆட்டுவிக் கிறாரோ, அப்படியே நாம் ஆடிக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் "சித்தம் போக்கு சிவன் போக்கு" என்ற வழக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**பழனி முருகனை ஆண்டிக் கோலத்தில் தரிசிக்கக் கூடாது என்று சிலர் கூறுகிறார்களே! இது சரியா?**

தவறு! சைவாகமங்கள் பழனி மலையில் ஆண்டிக்கோலத்தில் அருள்பாலித்து வரும் முருகனை வர்ணிக்கும்போது "கல்பத்ருமம் ப்ரணமதாம்." எனக் குறிப்பிடுகிறது.. "கல்பத்ருமம்" எனில் சுவர்க்கத்தில் உள்ள ஒரு மரம். விரும்பியதைக் கொடுக்கும் கற்பக மரம். நமக்கு நல்லவை எவையோ அவை அனைத்தையும் நமக்கு அளித்து, நமக்கு அருள் புரிந்து வரும் கடவுளே பழனி மலை முருகன். நேரில் சென்று வழிபட்டு வாருங்கள். உங்களுடைய வாழ்க்கையில் நல்ல மாற்றம் காண்பீர்கள்.

தண்டம் எனில் கம்பு. எப்படி ஒரு எலும்பு சிகிச்சை நிபுணர் கையில் ஒரு கம்பை வைத்துக் கொண்டு நம்மைச் சோதித்துப் பார்த்து, நமது நோய்களை அறிந்து அவற்றைக் குணப்படுத்து கிறாரோ. அதுபோன்று நமது கர்மபலன்களை அறியச் செய்து, அவற்றைக் களையக் கந்தன் எடுத்த கோலமே ஆண்டிக்கோலம். போகர் போன்று பல சித்தர்கள், இன்றளவும் தங்களுடைய சூட்சும சரீரத்தில் வந்து தரிசித்து ஆனந்தம் அடையக்கூடிய க்ஷேத்திரம் பழனிமலை. பல இரகசியங்களைத் தன்னுள் அடக்கியது. நாமும் பேராசைகளை விட்டொழித்து நல்வழியில் செல்ல எல்லாம் வல்ல கந்தனை வழிபடுவோம்.

-நன்றி - "அறிவோம் ஆன்மிகம்"

# கண்ணனும் தாத்தாவும்



**முத்து**

கண்ணன் இன்றுதான் முதன்முதலாக இடைநிலைப் பள்ளிக்குப் (Secondary school) போயிருக்கிறான். அந்தப் பகுதியிலுள்ள பிரபலமான பள்ளி அது. கண்ணன தனது 11+ தேர்வை மிகத்திறமையாகச் செய்தபடியால் அவனுக்கு அந்தப் பள்ளி கிடைத்தது. வீட்டில் எல்லோருக்குமே மிகப் பெருமையும் மகிழ்ச்சியும். ஏனென்றால், கண்ணன் மேலதிக வகுப்புக்கள் எதற்கும் போகவில்லை. வீட்டிலுள்ள அப்பா, அம்மா, தாத்தா, பாட்டியின் கற்பித்தலில் மட்டும் கற்று, அவனுக்கு இந்தப் பள்ளி கிடைத்துள்ளது. அன்று, அவன் அப்பாதான் பள்ளிக்குப் பேருந்தில் (Bus) அழைத்துச்சென்றார். மணி மூன்றரை ஆகியது. தாத்தா பேரனின் முதல் நாட் பள்ளி அநுபவம் எப்படியென்று அறியும் ஆவலில் வாசலில் காத்திருக்கிறார். தூரத்திலிருந்தே தாத்தா நிற்பதைக் கண்ட கண்ணன் துள்ளிக்கொண்டு ஓடிவருகிறான்.

**கண்ணன்:** என்ன தாத்தா? அதிக நேரமாக வாசலில் நிற்கின்றீர்களா?

**தாத்தா:** மணி மூன்று பதினைந்து ஆனதும் நீ எப்போது வருவாயென்று பார்த்துக்கொண்டிருக்கிறேன் கண்ணா!

**கண்ணன்:** ஏன் தாத்தா, நான் அப்பாவுடன்தானே வருகிறேன். பிறகு ஏன் கவலைப் பட்டீர்கள்?

**தாத்தா:** ஓ!! அது தெரியுமடா கண்ணா! உனது முதல்நாள் பள்ளி எப்டியிருந்தது? உனக்குப் பயமாக இருந்ததா? குதூகலமாக இருந்ததா என்று அறியத்தான்.

**கண்ணன்:** அதெல்லாம் ஓகே தான் தாத்தா!

**தாத்தா:** சீருடையில் (Uniform) நீ நல்ல smart ஆக இருக்கிறாய் கண்ணா

**கண்ணன்:** அப்படியா தாத்தா! Thank you தாத்தா நான் என்னைக் கண்ணாடியில் பார்க்கவில்லைத் தாத்தா. புதுப் பள்ளிக்குப் போகிற சந்தோஷத்தில் அவசரமா வெளிக்கிட்டு நேரத்துடன் போய்ச் சேர்ந்தவிட்டோம். என்னைப் போலவே புது மாணவர்களில் அநேகம்பேர் 8 மணிக்கே வந்துவிட்டார்கள்.

**தாத்தா:** அப்படியா கண்ணா! எத்தனை மணிக்குப் பள்ளிக்கூடம் ஆரம்பமாகும்?

**கண்ணன்:** பள்ளிக்கூடம் காலை 9 மணிக்குத்தான் ஆரம்பமாகும் தாத்தா. புது

மாணவர்களை மட்டும் இன்று 8.30 மணிக்கு வரச்சொன்னார்கள். நாளையிலிருந்து காலை 8.45 மணிக்குப் பள்ளிக்கூடத்தில் இருந்தால் சரி.

தாத்தா: இன்றைக்குப் போக எவ்வளவு நேரம் ஆனது கண்ணா?

கண்ணன்: நாற்பத்தைந்து நிமிடம் ஆனது தாத்தா. ஆனபடியால் நாளைக்கு வீட்டிலிருந்து 8 மணிக்குப் புறப்பட்டால் போதுமானது என்று நினைக்கிறேன் தாத்தா.

தாத்தா: இல்லை கண்ணா! நீ பேருந்தில் போவதால் இன்னொரு பத்து நிமிடம் முதலே புறப்பட்டால் நல்லது. நடந்து போவதானால் நேரத்தைச் சரியாக் கணிப்பிடலாம்.

கண்ணன்: சரி தாத்தா

பாட்டி: பள்ளியிலிருந்து களைத்துப்போய் வரும் பிள்ளையை வாசலிலே வைத்தே ஆயிரம் கேள்வி கேட்கிறார். கண்ணா! போய் கை, கால் கழுவிவிட்டு வா, ஏதாவது சாப்பிடலாம். பின் களைப்பு ஆறியபின் மீதி விடயங்களைப் பேசலாம்.

தாத்தா: பாட்டிக்குச் சாப்பாடுதான் மிக முக்கியம். காலையிலிருந்து எதுவும் சாப்பிடாமல் கண்ணன் பட்டினியாக இருப்பதுபோல ஒரு நினைப்பு. சரி, ஓடி வா கண்ணா!

பாட்டி: உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் சாப்பாடுதான் முக்கியமான முதலாவது தேவை என்பதைத் தாத்தா மறந்துவிட்டார் போல இருக்கிறது கண்ணா!

தாத்தா: (சிரித்துக்கொண்டே) பாட்டிக்கு கோபம் வந்துவிட்டது கண்ணா! ஓடிவந்து சாப்பிடு. நாங்கள் பின்னர் பேசுவோம்.

கண்ணன்: நீங்களும் பக்கத்தில் வந்து இருங்கள். நான் இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் நடந்தவற்றைச் சொல்கிறேன்.

(கண்ணன் பாட்டி சமைத்து வைத்த சுண்டலைச் சுவைத்தபடி, தேநீரையும் அருந்துகிறான்)

தாத்தா: சுண்டல் எப்படியிருக்கிறது கண்ணா?

கண்ணன்: பாட்டியின் சமையல் எப்போதுமே super taste தானே தாத்தா. நீங்கள் சாப்பிடவில்லையா?

தாத்தா: நீ வளர்ந்துவரும் பிள்ளை. உனக்குத்தான் நிறையச் சத்தான உணவு தேவை. எனக்கு வயதாகிவிட்டது. சிறிய அளவே போதுமானது.

கண்ணன்: ஏன் தாத்தா அப்படி?

தாத்தா: நீ இப்போது வளர்கிறாய். 50 வயதுக்குமேல் உடம்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தேய ஆரம்பிக்கும். பூரணைக்குப் பின்னால் சந்திரன் தேய்வதுபோல. வளர்ந்தபின் நீ இதுபற்றி மேலும் அறிந்துகொள்வாய். சரி, பள்ளியில் என்ன நடந்தது? சொல் பார்க்கலாம்.

கண்ணன்: போனவுடன் எங்களை ஓர் அறையில் இருக்கச் சொன்னார்கள். பின் எங்கள் பெயரைப் பதிவுசெய்தார்கள். அதன்பின் தலைமை ஆசிரியர் வந்து பள்ளிக்கூடத்தில் செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை என்பவை பற்றிச் சொன்னார். பொதுவாக நாங்கள் பள்ளிக்கூடத்தில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்று சொன்னார். அந்த நிகழ்ச்சி முடிந்ததும் எம்மை எமது வுகுப்புக்களுக்கு அழைத்துச் சென்றனர். அங்கே எங்கள் வகுப்பாசிரியர் வந்து எங்களை அழைத்துச் சென்று நூலகம், விஞ்ஞான கூடம், விளையாட்டிடம், உணவகம், கழிப்பிடம் ஆகிய அனைத்தையம் எங்கெங்கே இருக்கின்றன என்பதைக் காட்டினார்.

தாத்தா: உன் வகுப்பாசிரியருக்கு என்ன பெயர் கண்ணா?

கண்ணன்: அவரின் பெயர் ஜோன் சிமித் தாத்தா. அவர் எங்களுடன் அன்பாகப் பேசினார். அவரைப் பார்த்ததும் எனக்கு அவரை நன்கு பிடித்துக்கொண்டது.

தாத்தா: அவர் என்னென்ன பாடங்கள் படிப்பித்தார்?

கண்ணன்: இன்றைக்கு அவர் பாடத்திட்டம் பற்றிச் சொன்னார். நேர அட்டவணை தந்தார். வகுப்பில் நாங்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று சொன்னார். தப்புச் செய்தால் என்ன தண்டனை என்றும் சொன்னார்.

தாத்தா: எல்லாவற்றையும் நன்றாக நினைவுபடுத்திச் சொல்லவிட்டாயே கண்ணா! நீ கெட்டிக்காரன்தான். அதுசரி, இன்று நல்ல நண்பர்களாக வரக்கூடிய யாரையும் சந்தித்தாயா?

கண்ணன்: வகுப்பில் எனது இடப்பக்கத்தில் ஒரு குஜராத் இனப் பையன் இருந்தான். மறுபக்கத்தில் ஒரு இசுலாமிய இனப் பையன். இருவரும் என்னுடன் நண்பராக இருப்பார்கள் என்று நம்புகிறேன் தாத்தா.

தாத்தா: நல்லது கண்ணா. நல்ல நண்பர் இருப்பது நல்லது, அவசியமானதும் கூட.

கண்ணன்: ஆமாம் தாத்தா. திருக்குறளில் வரும் நட்பைப்பற்றி முன்னர் எனக்குச் சொல்லித்தந்திருக்கிறீர்களே!

தாத்தா: வேறு என்ன செய்தீர்கள் கண்ணா?

கண்ணன்: எங்கள் ஆசிரியர் எங்கள் பொழுதுபோக்கு என்ன என்று ஒவ்வொருவராகக் கேட்டார். பொழுதுபோக்கு இருக்கவேண்டிய அவசியத்தையும் விளங்கப்படுத்தினார். மாணவர்கள் ஒவ்வொருவராகத் தங்கள் பொழு துபோக்குக்கள் பற்றிச் சொன்னார்கள். சிலர் தாங்கள் டிவி பார்க்கப் பெற்றோர் தடை விதித்துள்ளதாகச் சொன்னார்கள். வேறு சிலர் டிவி பார்ப்பதே தங்கள் பொழுதுபோக்கு என்றார்கள். சிலர் புத்தகம் வாசிப்பார்களாம். சிலர் காற்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுக்கள் விளையாடுவார்களாம். ஆனால் அதிகமானோர் கணினியிலே நேரம் செலவிடுவதாகச் சொன்னார்கள்.

**தாத்தா:** நல்ல சுவாரஸ்யமாக இருக்கிறது. நீயும் மாணவர்களுடன் பழகும்போது அவர்களின் பொழுதுபோக்குப் பற்றி மேலும் அறியலாம். ஆசிரியர் வேறு என்ன சொன்னார் கண்ணா?

**கண்ணன்:** டிவியில் நல்ல நிகழ்ச்சிகளைப் பார்ப்பது நல்லது என்றார். கல்வி சம்பந்தமான ஆவணப் படங்கள், உலக நிகழ்வுகளைப்பற்றி அறிய உதவும் நிகழ்வுகள் போன்றவற்றைப் பார்க்கவேண்டும் என்றும் சொன்னார். அவை பொது அறிவை யும் மொழி அறிவையும் வளர்க்கும் என்றார். எனக்கு நீங்கள் சொல்லிக்கொடுத்த "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்ற பழமொழியை ஆங்கிலத்தில், "Too much of anything is good for nothing" என்று சொன்னேன். அதை அவர் மிகவும் இரசித்து என்னைப் பாராட்டினார் தாத்தா!

**தாத்தா:** ஆகா! ஆகா! நான் உன்னைப் பார்த்து மிகவும் பெருமைப்படுகிறேன். நீ கெட்டிக்காரன். உனது பொழுதுபோக்கு என்னவென்று நீ சொன்னாய்?

**கண்ணன்:** டிவியில் நல்ல நிகழ்ச்சிகளைப் பார்ப்பது, தாத்தாவுடன் தமிழ் டிவி பார்ப்பது, நல்ல புத்தகங்களை வாசிப்பது, தாத்தாவிடம் கதை கேட்பது என்று சொன்னேன்.

**தாத்தா:** என்ன கதையென்று சொன்னாயா?

**கண்ணன்:** நீதிக் கதைகள், சமய சம்பந்தமான கதைகள் என்று சொன்னேன் தாத்தா. கோயிலுக்குப் போவதையும் சொன்னேன். ஆனால் கோயிலுக்கப் போவது பொழுதுபோக்கல்ல, அது அத்தியாவசிமான ஒரு ஆன்மிகத் தேவை என்று சொன்னேன்.

**தாத்தா:** அப்படியா? அதற்கு ஆசிரியர் என்ன சொன்னார்?

**கண்ணன்:** நான் நல்ல சுவாரசியமான விடயங்களைச் சொன்னதாகவும் நீங்கள் என்னை அக்கறையாக வளர்ப்பதுபோலத் தெரிகிறது என்றும் சொன்னார். சமய நம்பிக்கையுடன் வாழ்வது நல்லது என்று மற்றைய மாணவர்களுக்குச் சொன்னார்.

**தாத்தா:** அதனாலேதான் இந்த நாட்டிலும் சமயத்தை ஒரு பாடமாகத் தேர்வுக்கு எழுதும்படி பள்ளிகளில் ஊக்குவிக்கிறார்கள். நீ சரியான விஷயங்களைச் சொல்லியிருக்கிறாய் கண்ணா. மிகவும் நல்லது. எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது.

**பாட்டி:** தாத்தா உனக்குச் செய்யும் பிரசங்கத்தை நீ எல்லோருக்கும் எல்லா நேரமும் சொல்லக்கூடாது. பமின்னர் உன்னை அதிகப்பிரசங்கி என்று மற்றவர்கள் நினைக்கக்கூடும். தேவைக்கேற்றபடி அளவோடு பேசவேண்டும்.

**கண்ணன்:** நான் இன்றைக்குச் சொன்னதுபோல ஒவ்வொரு நாளும் வந்து பள்ளியில் நடந்தவற்றை உங்களுக்குச் சொல்வேன். நீங்கள் சரி பிழைகளைச் சொல்லி நான் திருந்த உதவலாம்.

தாத்தா: கண்ணன் கெட்டிக்காரன். அவனுக்கு எல்லாம் தெரியும். ஆசிரியர் கேட்டபடியால் சொன்னான். இல்லாவிட்டால் இப்படியெல்லாம் பேசமாட்டான்.

பாட்டி: சரி சரி தாத்தா பேரனுக்குத்தான் வக்காலத்து வாங்குவார்.நான் உள்ளே போகி றேன்.

தாத்தா: (பேரனைக் கடடிப்பிடித்தபடி) கண்ணா! நீ கெட்டிக்காரன். பாட்டி சொன்னதும் சரிதான். அளவாகவே பேசவேண்டும். யாருக்கு என்ன சொல்கிறோம் என்பதையும் கவனிக்கவேண்டும். அதுதான் எப்போதும் நல்லது.

கண்ணன்: சரி தாத்தா, அதை என் மனதில் பதித்துக்கொள்கிறேன்.

## யார் நல்ல வாய் உடையவர்?

“முகம் என்பது முழு மூஞ்சிக்கு மட்டுமல்லாமல் அதிலே உள்ள வாய்க்கும் பேர். ஸம்ஸ்கிருதத்தில் வாய்க்குத் தனியாகப் பேர் கிடையாது. அத்தனை பேர்களையும் சொல்கிறதாகவும், பேச்சுக்கே கரு வியாகவும் இருக்கிற வாய்க்குத் தனிப்பேர் இல்லாமல் முகம் என்றேதான் அதையும் சொல்லவேண்டியிருக்கிறது. தமிழிலே வாய்க்கு வாய் என்று பேர் இருந்தாலும் முகத்துக்குப் பேரே இல்லை. முகம் என்பது ஸமஸ்கிருத வார்த்தை. மூஞ்சி என்பது பேச்சுவழக்கில் உள்ள கொச்சைதான்.

அந்தக் காலத்தில் ஸம்ஸ்கிருத கடிகையில் படிக்கும் வித்யார்த்திகளும் தமிழ்ப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களும் பரஸ்பரம் பரிஹாசம் பண்ணிக்கொள்வார்களாம். இவன் அவனை முகம் இல்லாதவன் என்பானாம். அவன் இவனை வாயில்லாதவன் என்று திருப்புவானாம். Good humoured banter என்கிறார்களே! அப்படி நல்லெண்ணத்தோடு சேர்ந்த ஹாஸ்ய உணர்ச்சியில் கேலிபண்ணுவார்கள். த்வேஷம் கிடையாது.

முகம் என்றாலே வாய் என்று சொல்லவந்தேன். ஸுமுகம், நல்ல வாய் என்றால் எது நல்ல வாய்? நல்ல விஷயங்களை, ஸத் வித்யைகளைச் சொல்கிற வாய்தான் நல்ல வாய். அதனால் நல்ல வித்வானுக்கு ஸுமுகர் என்று பேருண்டு. ஸுமுகர் என்றால் கற்றிந்தவர்.

இந்த அர்த்தத்திலேயும் பிள்ளையார் ஸுமுகர். அவர் நல்ல வாயையுடைய மஹா வித்வான். ப்ரஹ்மணஸ்பதி, ப்ருகஸ்பதி என்று வேதங்களில் சொல்லப்படும் மஹா மேதாவிக்கும் அவருக்கும் பேதம் கிடையாது. அவருடைய அநேக ரூப பேதங்களில் “வித்யா கணபதி” என்றே ஒருத்தருண்டு.

21 கணபதி பேதங்களைச் சொல்லி ஒவ்வொருத்தனுக்கும் ஒரு புஷ்பமாக 21 தினுஸு புஷ்பங்களை அர்ச்சனை பண்ணும்படியாக சதுர்த்தி பூஜாகல்பத்தில் விதித்திருக்கிறது. அதிலே வித்யாகணபதி என்ற பேரைச் சொல்லி அவருக்கு ரஸாள புஷ்பம் போடணும் என்று இருக்கிறது. ரஸாளம் (ரஸாளு என்று பொதுவாகச் சொல்கிறது) தான் மாம்பழங்களுக்குள்ளேயே பரம மதுரமாக இருக்கப்பட்ட தினுஸுவித்யை என்பது அப்படிப்பட்ட ஆத்ம மாம்பழம். யார் லோகத்தை முதலில் சுற்றிக்கொண்டு வருகிறார் களோ அவர்களுக்கு என்று நாரதர் கொடுத்த பழத்தை வைத்துப் பரமசிவன் பந்தயம் நடத்தி அதிலே விக்நேச்வரர் ஜயித்துப் பெற்றுக்கொண்ட ஞானப் பழம் அந்த மாம்பழந்தான்.” -காஞ்சி மகான்

**நன்றி - கல்கி 29.06.2014**

# Hinduism in search of Answers.........

Compiled by S Atputhananthan

**Why do we say shaanti three times?**

Shaanti, meaning "peace", is a natural state of being. Disturbances are created either by others or us. For example, peace already exists in a place until someone makes noise. Therefore, peace underlies all our agitations. When agitations end, peace is naturally experienced since it was already there. Where there is peace, there is happiness. Therefore, every one without exception desires peace in his/her life.

However, peace within or without seems very hard to attain because it is covered by our own agitations. A rare few manage to remain peaceful within even in the midst of external agitation and troubles. To invoke peace, we chant prayers. By chanting prayers, troubles end and peace is experienced internally, irrespective of the external disturbances. All such prayers end by chanting shaanti thrice.

It is believed that trivaram satyam - that which is said thrice comes true. For emphasising a point we repeat a thing thrice. In the court of law also, one who takes the witness stands says, "I shall speak the truth, the whole truth and nothing but the truth".
We chant shaanti thrice to emphasise our intense desire for peace. All obstacles, problems and sorrows originate from three sources.

Aadhidaivika : The unseen divine forces over which we have little or no control like rain, floods, volcanic eruptions etc.
Aadhibhautika: Events caused by other living beings around us like animals, enemies, etc.
Aadhyaatmika : Sorrows caused by one's own body and mind.

We sincerely pray to the Lord that at least while we undertake special tasks there are no problems or those problems are minimised from the three sources written above. May peace alone prevail.
Hence shaanti is chanted thrice. It is chanted aloud the first time, addressing the unseen forces. It is chanted softer the second time, directed to our immediate surroundings and those around, and softest the last time as it is addressed to oneself.

- Swami Chinmayananda

**Why do we offer a coconut?**

In India one of the most common offerings in a temple is a coconut. It is also offered on occasions like weddings, festivals, the use of a new vehicle, bridge, house etc. It is offered in the sacrificial fire whilst performing ***homa***. The coconut is broken and placed before the Lord. It is later distributed as ***prasaada.***

The fibre covering of the dried coconut is removed except for a tuft on the top. The coconut is broken, symbolising the breaking of the ego. The juice within, representing the inner tendencies (vaasanas) is offered along with the white kernel - the mind, to the Lord.



A mind thus purified by the touch of the Lord is used as prasaada ( a holy gift). In the traditional abhishekha ritual done in all temples and many homes, several materials are poured over the deity like milk, curd, honey, tender coconut water, sandal paste, holy ash etc. Each material has a specific significance of bestowing certain benefits on worshippers. Tender coconut water is used in abhisheka rituals since it is pure, natural and untouched by anyone.



The coconut also symbolises selfless service. Every part of the tree - the trunk, leaves, fruit, coir etc.- is used in innumerable ways like thatches, mats, tasty dishes, oil, soap etc. It takes in even salty water from the earth and converts it into sweet nutritive water that is especially beneficial to sick people.



When performing Archana, the three marks on the coconut shell represent the two physical eyes of a person and the third eye of divine wisdom which is covered by ignorance. When the Archana is performed the devotee offers the fruits of his actions together with the ignorance and ego covered mind to God through the priest (representing Satguru). The priest (Satguru) breaks the hard shell (representing the ego) and removes the tuft covering the eyes to reveal the third eye (symbolising the removal of ignorance and kindling divine wisdom) in the presence and grace of God.

- Swami Chinmayananda

**Why do we chant Om (AUM)?**

Om is one of the most chanted sound symbols in India. All the vedic mantras are product of this monosyllable which is believed is believed to be the vibration that existed before the world is created. It has a profound effect on the body and mind of the one who chants and also on the surroundings.

Most mantras and vedic prayers start with Om. All auspicious actions begin with om. It is even used as a greeting - Om, Hari om etc. It is repeated as a mantra or meditated upon. Its form is worshipped, contemplated upon or used as an auspicious sign.


Om is the universal name of the Lord. It is made up of the letters A (phonetically as in "around"), U (phonetically as in "put") and M (phonetically as in "mum"). The sound emerging from the vocal chords starts from the base of the throat as "A". With the coming together of the lips, "U" is formed and when the lips are closed, all sounds end in "M"



The three letters symbolise Creation, Sustenance and Destruction. It can also represent the three states of waking, dream and deep sleep. The God is all these and beyond.

In Japa meditation, the formless, attributeless God (Brahman) is represented by the silence between two Om Chants. Om is also called Pranava. The entire essence of the Vedas is

enshrined in the word Om. Its sound is considered to create an auspicious beginning for any task that we undertake.




Om is written in different ways in different places. Lord Ganesha symbolises this mantra.

**Why do we do aarati?**

At the start or towards the end of every ritualistic worship (pooja or bhajan) of the Lord or to welcome an honoured guest or saint, we perform the aarati. This is accompanied by the ringing of the bell and sometimes by singing, playing of musical instruments and clapping. It is one of the sixteen steps of the pooja ritual (shodasha upachaara). It is performed with the lighted lamp in the right hand which is waved in a clockwise circling movement to light the entire form of the Lord.

In temple pujas each part of the statue is revealed individually and also the entire form of the Lord. As the light is waved we either do mental or loud chanting of prayers or simply behold the beautiful form of the Lord, illumined by the lamp. At the end of the aarati we place our hands over the flame and then gently touch our eyes and the top of the head.

Having worshipped the Lord by performing abhisheka, decorating the image and offering fruits and delicacies, we see the beauty of the Lord in all His glory. Our minds are focussed on each limb of the Lord as it is lit up by the lamp. It is akin to silent open-eyed meditation on His beauty. The singing, clapping, ringing of the bell etc. denote the joy and which accompanies the vision of the Lord.



Aarati is often performed with camphor. This holds a telling spiritual significance. Camphor, when lit, burns itself out completely without leaving a trace of it. It represents our inherent tendencies (vaasanas). When lit by the fire of knowledge which illumines the Lord (Truth), our vaasanas thereafter burn themselves out completely, not leaving any trace of ego. (It is the ego which creates in us a sense of individuality that keeps us separate from the Lord)



While camphor burns to reveal the glory of Lord, it emits a pleasant fragrance even while it sacrifices itself. Similarly, in our spiritual progress, as we serve the guru and society, we should

willingly sacrifice our time and effort to spread the fragrance of love to all. Just as the priest reveals the form of the Lord clearly with the aarati flame, so too the guru reveals to us the divinity within each of us with the help of the flame of knowledge (or the light of spiritual knowledge). At the end of the aarati, we place our hands over the flame and then touch our eyes and the top of the head. It means - may the light that illuminated the Lord light up my vision; may my vision be divine and my thoughts noble.


The sun, moon, stars, lightning and fire are examples of natural sources of light. The sun is the presiding deity of the intellect, the moon, that of the mind, and fire, that of speech. The Lord is the source of these wonderous phenomena of the universe. It is due to Him alone that all else exist and shine. As we light up the Lord with the flame of the aarati, we turn our attention to the very source of all light, which symbolises knowledge and life.

***Swami Chinmayananda***

**Why use Sanskrit in rituals?**

Why should not the ordinary, spoken languages be used in worship instead of Sanskrit? Will this not enable us to understand and follow these rites better?

Puja (worship), Homa (sacrifices) and other similar religious rites are considered as sacred and holy acts. It is the Rishis (sages), the originators of our religious traditions, who have given us these rites including the procedures and the mantras to be used. Hence we conform strictly to the pattern of the rites and the language in which they have been transmitted to us. This produces a solemn and sacred atmosphere. Again, according to the science of the Mantras, the various Mantras used in the rites have a special potency. When they are pronounced and intoned properly, they exert a beneficial effect on the minds of those who hear them. Therefore, if translations or versions in the spoken language are used, they will just be translations only and do not act as Mantras.




It would be helpful if a general description of the rites and the meaning of the mantras are given first in the spoken language followed by the rituals in the traditional manner. The rites would then become more intelligible to the interested devotees.


It should not be forgotten here that even in other religions, the religious rites and ceremonies are being conducted in the language of the original scriptures.

**Are non-Hindus permitted into Hindu temples?**

In some temples, admission is restricted to certain parts of the temple only. If the non Hindus visit Hindu temples with the same faith they show while they visit the places of worship of their own religions (ie. feeling that Hindu temples are also holy), there should be no objection to their being admitted. However, if they come without having such faith, but purely out of curiosity or for fun, or even to find fault, then they would not be benefited in the least by such visits. On the other hand, it could hurt the religious feelings and sentiments of the Hindus visiting the temples. It follows that even Hindus should only visit the temple with reverence and devotion and not for any other purpose.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

-பத்மா குணசீலன்-



உத்தமர் நாவலர் உதித்தது நல்லூரில்; மெத்தப்படித்து வித்தகரானது பின்னாளில்
சைவமும் தமிழும் அவரிரு கண்கள் சளைக்காது உழைத்த சாமான்யன் அவர்
அந்நியர் நம்மை ஆண்டவேளை அறியாமை என்னும் மாயையில்
தமிழன் தாழ்ந்து கிடந்தவேளை உத்தியோகமே பெரிதென நினைத்து
உயிராகப் போற்றி வளர்த்த சைவத்தை உணவுக்காய்த் தான் மறந்து
சிலுவை மதமே சிறந்ததெனச் சீர்கெட்ட தமிழர் மாறினரே தரம் தாழ்ந்து
ஐயகோ! என் செய்வோம் என ஏங்கினரே தமிழ்ச் சான்றோர்!
எழுந்ததோர் விடிவெள்ளி எம்சமயம் காக்கவென எழுந்தான் நாவலன்
செந்தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம் வேதம் ஆகமம் சித்தாந்தமெனக் கற்று
விவிலிய மதனையும் தானே மொழிபெயர்த்து, சைவமே மெய்யென உணர்ந்து
பள்ளிக் கூடங்கள் பற்பல உருவாக்கி இலவசக் கல்வியையும் தான் வழங்கி
இலவசப் பாடப் புத்தகம் வழங்கி ஊர்கள் தோறும் சமயப் பிரசாரம்
உயர்வே சமயமும் தமிழு மெனவோர் முழக்கம் மெய்யான சமயம் சைவமேயெனும்
மேன்மையை நன்கு உணரவைத்து சைவமும் தமிழும் தழைத்தோங்க
சான்றோர் உதவியைத் தான்நாடி அச்சுக்கூடங்கள் பல நிறுவி
செய்யுள் நடை நூல்களை எளிய வசனநடைக்கு மாற்றிட்டு
தாய்நாடு பெற்ற தன் செயலை தாய்தமிழ் நாடும் பயன்பெற
அங்கேயும் பாடசாலை அச்சககூடமென நிறுவி அரிய பல பிரசங்கங்களை நடாத்த
ஆன்றோர்கள் பலர் ஒன்று கூடி "நாவலர்" பட்டமளித்து மகிழ்ந்தனரே
நாவலர் பின்பு ஆறுமுக நாவலராகி தமிழுலகம் போற்றுபவராகி பின்
தம்நாட்டில் கடும் பஞ்சம் வந்தக்கால் கஞ்சித் தொட்டிகள் பலவற்றை நிறுவி
பாமர மக்களைக் காத்திட்டாரே நெல்வயல்கள் வெள்ளத்தாலழிந்தபோது
நெஞ்சில் வலியுடன் விதைநெல் வழங்கினாரே
நாவலர் சிலையை நல்லூரில் நாட்டிய பெருமை
நம்தமிழர் தாமெமக்கே நாவலர் ஆற்றிய நற்பணிகள்
நானிலமுளவரை நிலைத்திருக்கும்
நாவலர் இங்கு தோன்றாவிடின்
சைவமும் தமிழும் மறைந்திருக்கும் கார்த்திகை மாத குருபூசை
காலமெல்லாம் நிலைத்திருக்க நாளும் பொழுதும் நாவலரை
நம் மனதில் நாமிருத்தி நாவலர் வழி நம்வழியென
இன்றே உறுதிதனை நாமெடுப்போம்.

# குடை, கைத்தடி, செருப்பு

**சிவபுத்திரன்**

சீவகசிந்தாமணி என்ற காப்பியத்தில் அந்தநாளைய வாழ்க்கை நிலையைப்பற்றிப் பல விடயங்கள் காணப்படுன்றன. அதில் என்னைக் கவர்ந்த மூன்று பாடல்களைப் பார்ப்போம்.

**குடை:**

பகலோன் றெறுங்கிரணம் பாய்பறவை எச்சம்
மிகமே லுறா(து)அகற்றும் விண்ணின் - முகிலதனால்
பெய்யுமழை யைத்தடுக்கும் பேரழகு மாமொருவன்
கையிற் குடையிருந்தக் கால்

ஒருவனுடைய கையில் குடை இருந்தால் அது சூரியனுடைய கொடூர வெயிலைத் தடுத்து நிறுத்தும். வானில் பறக்கும் பட்சிகளின் கழிவுகளையும் குடை பிடித்திருப்பவனின் மேலே விழாமல் அவனுக்கு பாதுகாப்புத் தரும். ஆகாய முகில்களினால் பெய்யப்படும் மழையை உடல் நனையாதபடி பாதுகாப்பைத் தருவதோடு மிக அழகையும் தரும்.

**கைத்தடி:**

முனிஅதட்டும் முள்தூக்கும் முந்நீர் அளக்கும்
கனிஉதிர்க்கும் கவ்வுநாய் காக்கும் - தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயம்தீர்க்கும் பாம்படிக்கும்
கைத்தலத்தில் தண்டிருந்தக் கால்

ஒருவனுடைய கையில் கம்பு இருந்தால், அது துட்டசக்திகளைப் பயப்படவைக்கும், பாதையில் உள்ள முட்புதர்களை விலக்கிப் போக வழிவிடும். வழியில் உள்ள நீர் நிலைகளின் ஆழத்தை அளந்து பார்த்து எச்சரிக்கை செய்யும். மரத்தின் மீதுள்ள கனிகளைப் பறிப்பதற்கு உதவும். ஏதிரில் வரும் கடிநாய்களிடமிருந்து பாதுகாக்கும். அச்சவுணர்வை அகற்றும். பூச்சி, பாம்பு போன்றவற்றின் தாக்குதலிலிருந்து எங்களைக் காக்கும்.

**செருப்பு:**

கல்லும் உறுத்தாது காலில்முள் தையாது
எல்லைமார்த் தாண்டன்சூ(டு) ஏறாது - தொல்லைவரு
மாலை இருளில் வழிநடக்கக் கூசாது
காலில் செருப்பிருந்தக் கால்

ஒருவனுடைய பாதத்தில் செருப்பு அணிந்திருந்தால் கற்களோ முட்களோ குத்தமாட்டா. காலத்தை நிர்ணயம் செய்யும் சூரியனுடைய வெப்பமும் நிலத்தின் சூடும் அவனை எதுவும் செய்யா. மாலை நேர இருளில் அவன் தயக்கமில்லாமல் வழிநடப்பதற்கும் அது உதவுகிறது.

**"யாம்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"**


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 18 - 10 - 2019 அன்று வெளியிடப்படுகிறது.